வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 04.06.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 156 பக்கங்கள் : 12





## தென்னிலங்கை அனர்த்தம்:

# உயிரிழப்பு 16ஆக உயர்வு; 84 ஆயிரம் பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 04

தென்னிலங்கையில் நீடிக்கும் சீரற்ற கால நிலையால் நேற்றும் நேற்றுமுன்தினமுமாக இரு நாட்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16ஆக அதிகரித்துள்ளது.

இந்த இரு நாட்களிலுமாக 21ஆயிரத்து 353 குடும்பங்களை சேர்ந்த 84 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

கடந்த இரு நாட்களிலும் மாத்தறை மாவட்டத்தில் 6 பேரும் இரத்தினபுரியில் 5 பேரும் கொழும்பில் 3 பேரும் காலியில் 2 பேருமாக 16 பேர் உயிரிழந்தனர். எனினும், கடந்த இரு வாரங்களில் 24 பேர் சீரற்ற கால நிலையால் உயிரிழந்தனர்.

அத்துடன், இந்த மாவட்டங்களில் 5 பேர் காணாமல் போயுள்ளனர். 6 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

காற்றால் மரங்கள் முறிந்து வீழ்ந்தும், மண்சரிவில் சிக்குண்டும், வெள்ளத்தில் மூழ்கியும் இந்த மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

சீரற்ற காலநிலையால் 6 வீடுகள்

11

தமிழ் பொது வேட்பாளர்

## தீர்க்கமான முடிவை எடுக்க இன்று கூடுகின்றது புளொட்!

யாழ்ப்பாணம், ஜூன் 04

தமிழ் பொது வேட்பாளரை களமிறக்குவது தொடர்பில் தீர்க்கமான இறுதி முடிவை தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) இன்றையதினம் எடுக்கும் என்று தெரியவருகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பில் தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றன. இந்த நிலையில், தமிழ்த் தேசிய கட்சிகளில் ஒன்றான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதாக தனது இறுதியான நிலைப்பாட்டை நேற்று முன்தினம் அறிவித்தது.

11

## தமிழ் பொது வேட்பாளர் தேவை என்பதில் உறுதி

புளொட்டின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 04

தமிழ் பொது வேட்பாளர் தேவை என்பதில் தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) உறுதியாக உள்ளது. எனினும், இந்த விடயம் தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள கட்சிகள் ஒற்றுமையாக - ஒன்றுபட்டு நிற்கும்போதே சாத்தியமானது - வலுவானது.

- இவ்வாறு அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் புளொட் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் 'ஈழநாடு' அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

11



## அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 04

கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது, களனி ஆற்றுப் பள்ளத்தாக்கில் வெள்ளத்தை ஏற்படுத்தும் வகையிலும் மழை நீர் வழிந்தோடு வதைத் தடுக்கும் வகையிலும் மேற்கொள்ளப்படும் புதிய நிர்மாண பணிகளுக்கு

11

## ஜனநாயக போராட்டங்களை அடக்குவதை கைவிடுங்கள்!

வட, கிழக்கு பல்கலை மாணவர் பொலிஸாருக்கு கண்டனம்!

மட்டக்களப்பு, ஜூன் 04

ஜனநாயக ரீதியான போராட்டங்களை அடக்கும் செயல்பாடுகளை பொலிஸார் கைவிட வேண்டும் - இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர் வடக்கு, கிழக்கு பல்கலைக் கழக மாணவர்கள்.

மட்டக்களப்பு - மயிலத்தமடு - மாதவனையில் தமிழ் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக கடந்த 2023 டிசெம்பர் 5ஆம் திகதி போராடிய மாணவர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் ஆறு பேரும் போதிய சாட்சிகள் - ஆதாரங்கள்

11

## ஐ. எம். எவ். கடனை பெறுவதற்கு நாடுகளின் ஒத்துழைப்பு தேவை

நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 04

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்) விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாவது மதிப்பாய்வு நடவடிக்கைக்கு கடன் வழங்கிய அனைத்து நாடுகளின் ஒத்துழைப்பும் அவசியம் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக்கு வழங்கப்படும் விரிவாக்கப்பட்ட

11

## வட மாகாண பாடசாலைகள் இன்று வழமைபோல் இயங்கும்


புதிய உயர்தர வகுப்புகளும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 04

வடக்கு மாகாண பாடசாலைகள் இன்று புதன்கிழமை வழமை போன்று நடைபெறும். அத்துடன், உயர்தர மாணவர்களுக்கான புதிய வகுப்புகளும் இன்றைய தினம் ஆரம்பமாகும் - என்று வடக்கு மாகாண கல்வி பணிப்பாளர் தி. யோன் குயின்ரஸ்

11

# பொது வேட்பாளரை நிறுத்துவதும் தேர்தல் புறக்கணிப்பும் ஒன்றல்ல!



## சுரேஷ் பிறேமச்சந்திரன் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 04

நாட்டில் புரையோடி போயுள்ள தேசிய இனப் பிரச்னை தீர்க்கப்படாமல் பொருளாதார பிரச்னை தீர்க்கப்பட மாட்டாது என்பதை உலகறிய செய்யவும் - சிங்கள மக்களுக்குப் புரிய வைக்கவும் வேண்டும். தேர்தல் புறக்கணிப்பால் எதனையுமே சாதிக்கப்போவது கிடையாது. ஜனாதிபதி தேர்தலை புறக்கணிப்பதும் பொது வேட்பாளரை நிறுத்தி வாக்களிக்க கோருவதும் ஒன்றல்ல - என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் விளக்கமளித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர்

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

மகன் ஒருவன் தன் தந்தையின் விருப்பத்துக்கு மாறாகவே எப்போதும் செயல்பட்டு வந்தான். இதனை உணர்ந்த அவனின் தந்தை மரணப்படுக்கையில் இருக்கும்போது, தன் விருப்பத்துக்கு மாறாகத்தான் மகன் செயல்படுவான் என்று எண்ணி மகனிடம், "மகனே, நான் இறந்ததும் ஏதாவது ஓர் நீர் நிலையில் என் உடலை அடக்கம் (புதைத்து) செய்துவிடு" என்று வேண்டிக் கொண்டான்.

தன்னைத் தரையில்தான் தன் மகன் புதைப்பான் என்று மனத்தில் நினைத்துக் கொண்டார். ஆனால், அந்த உதவாக்கரை மகனோ, வாழும்போதுதான் நான் என் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றத் தவறிவிட்டேன், அவர் இறந்த பிறகாவது நான் அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணி அவர் இறந்ததும் தங்கள் சொந்த மண்ணில் ஒரு சிறிய குளத்தை உருவாக்கி அதனுள் தன் தந்தையின் பிணத்தைப் போட்டுவிட்டான்.

தமிழ் பொதுவேட்பாளர் விடயம் மீண்டும் பரபரப்பாகியிருக்கின்றது. அதனால்தானோ என்னவோ அதனை எதிர்ப்பவர்களும் வரிந்துகட்டிக்கொண்டு களம் இறங்கியிருக்கின்றனர்.

"பொது வேட்பாளர் என்ற கதையாடல் சில நாட்களில் காணாமல் போய்விடும்" என்றும் சிலர் நம்பிக் கொண்டிருக்கையில்தான், தமிழீழ விடுதலை இயக்கம் - ரெலோ கட்சி அந்த விடயத்தில் தனது உறுதியான ஆதரவை வெளிப்படுத்தியிருக்கின்றது. இனி அதேவழியில் புளொட்டும் முடிவெடுக்கும் என்று நம்பப்படுகின்றது. இன்று அதன் மத்திய குழு கூடி முடிவெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதுவும் நடந்துவிட்டால், அடுத்தது தமிழ் அரசு கட்சி. தமிழ் அரசு கட்சி அவசரப்பட வேண்டியதில்லை என்றுதான் முடிவெடுத்திருக்கின்றதே தவிர, முற்றாக அதிலிருந்து வெளியேறிவிடவில்லை. அது வெளியேறவேண்டும் என்று விரும்புகின்ற சக்திகள் தமது பிரசாரத்தை தீவிரப்படுத்தியிருக்கின்றன. அவர்களின் முடிவு இனியும் தாமதமானால் பொது வேட்பாளர் விடயத்தை இப்போது முன்னெடுத்துவரும் சிவில் சமூக கூட்டிணைவு அரசியல் கட்சிகளுடன் அதாவது, ஏற்கனவே ஆதரவை வெளிப்படுத்திய கட்சிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பை அமைக்கின்ற பணியை தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்ற அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி தமது பகிஷ்கரிப்பு முடிவுக்கு ஆதரவாக பிரசாரத்தை தொடங்கிவிட்டதால் அது இனி இந்த விடயத்தில் இணைவதற்கு சாத்தியம் இருக்கப் போவதில்லை.

கடந்த மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும் வெறும் பகிஷ்கரிப்பு என்ற முடிவை எடுத்துவிட்டு அங்கொன்றும் இங்கொன்றுமாக சில துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துவிட்டு ஒதுங்கிக்கொள்கின்ற முன்னணி இப்போது தீவிர பிரசாரத்தில் களம் இறங்கியிருக்கின்றது. அதற்கு காரணமும் இல்லாமல் இல்லை. முன்னைய காலங்களில் தெற்கின் வேட்பாளருக்கு எதற்காக வாக்களிக்க வேண்டும் என்று பிரசாரம் செய்த முன்னணிக்கு இந்தத் தடவை ஏன் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கக்கூடாது என்றும் பிரசாரம் செய்யவேண்டிய தேவை இருக்கின்றது. அதனை தொடங்கிவிட்டதும் தெரிகின்றது. ஆனால், பொதுவேட்பாளர் எந்தக் கோரிக்கையை மக்களின் முன் வைத்துவிட்டு களம் இறங்கப் போகின்றாரோ - அதற்கு, எதற்காக தமிழ் மக்கள் ஆணையை வழங்க வேண்டும்? என்றும் முன்னணி கேட்க வேண்டியிருக்கும். சிலவேளை மக்கள் அதற்கு ஆதரவு வழங்காவிட்டால் முன்னணியின் கோரிக்கையை தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்றும் நாம் அர்த்தப்படுத்தலாம். அதாவது, நமது இறைமை - சமஷ்டி கட்டமைப்பு - வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் என்ற கோரிக்கைகளுடன் பொதுவேட்பாளர் களம் இறங்கினால் அது எதற்கு என்று முன்னணி கேட்குமோ தெரியவில்லை.

தற்போது பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவுக்கு வடக்கு, கிழக்கில் இயங்கும் பொது அமைப்புகள், சிவில் சமூகக் குழுக்கள் பெரும்பாலும் அனைத்துமே ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றன.

அரசியல் கட்சிகளிலும் மேலே தெரிவித்துள்ளதுபோல ஒரு கட்சி முடிவெடுக்கவில்லை. மற்றையது பகிஷ்கரிக்கின்றது. இனி அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளின் கூட்டணியும் சேர்ந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி, தமிழ் பொதுவேட்பாளர் களம் இறங்குகின்ற விடயத்தில் ஏனைய விடயங்களை இறுதி செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வேட்பாளரை தெரிவு செய்வது, எந்த கட்சியில் போட்டியிடுவது, அதிலும் முக்கியமாக என்ன கோரிக்கையை முன்வைப்பது என்பது போன்ற விடயங்கள் இறுதி செய்யப்பட்டதும் பிரசாரம் சூடுபிடிக்கலாம்.

என்ன, இந்தக் காரியங்கள் ஒவ்வொன்றாக நடக்கின்ற போதும் அவை ஒவ்வொன்றும் பற்றியும் நமது ஆய்வாளர்கள் தமது கருத்துகளை முன்வைப்பார்கள் என்றும் நாம் எதிர்பார்க்கலாம்.

மேலேயுள்ள கதையில் தந்தை என்ன சொன்னாலும் அதற்கு எதிராகவே மகன் செய்வது போலத்தான் - சிலர் ஆதரிக்கிறார்கள் என்பதற்காகவே அதனை எதிர்த்துக் கொண்டிருக்கின்றனர். அதுபற்றிய எந்த கரிசனையும் அவர்களிடம் இருப்பதாக தெரியவில்லை.

**ஊர்க்குருவி.**

## கணேசபுரத்தில் அறநெறி பாடசாலை கட்டடம் திறப்பு

வடமராட்சி, ஜூன் 04

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் 13 இலட்சம் ரூபாய் நிதி உதவியில் அமைக்கப்பட்ட அறநெறி பாடசாலை கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா - வெண்கல செட்டிக்குளம் - கணேசபுரம் சித்தி விநாயகர் அறநெறி பாடசாலைக்காக அமைக்கப்பட்ட கட்டடமே திறந்துவைக்கப்பட்டது.

அறநெறி பாடசாலை மாணவர்கள் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் கட்டடத்தை திறந்து வைத்ததுடன், கல்வெட்டையும் திரை நீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து சம்பிரதாய மரபுப்படி பால் காய்ச்சப்பட்டு அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பெருந்திரளானவர்கள் பங்கேற்றனர். (ஐ-02)

## மு. சிவசிதம்பரத்தின் நினைவேந்தல் நாளை

வடமராட்சி, ஜூன் 04

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் உப சபாநாயகருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் 22ஆவது நினைவுதினம் கரவெட்டியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஒன்றியத்தின் தலைவர் உபாலி எஸ். பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி பேருந்து நிலைய வளாகத்தில் அமைந்துள்ள அமரரின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படும்.

இதைத் தொடர்ந்து காலை 9. 00 மணிக்கு கரவெட்டி அத்துளு அம்மன் கோவில் அருகே உள்ள அமரர் சிவசிதம்பரத்தின் இல்லத்தில் அமைந்துள்ள அன்னாரின் சிலைக்கு எஸ். சிதம்பரநாதன் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

அமரர் சிவசிதம்பரம்

மு. சிவசிதம்பரம் 1923 ஜூலை 20ஆம் திகதி கரவெட்டியில் பிறந்தார். 1947இல் அரசியலில் நாட்டம் கொண்டிருந்த இவர் 1956ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் ஆதரவுடன் பாராளுமன்ற தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டார். பின்னர், காங்கிரஸ் கட்சியில் சேர்ந்த அவர் 1960, 1965 பாராளுமன்ற தேர்தல்களில் வெற்றிபெற்றார்.

காங்கிரஸ், தமிழ் அரசு கட்சிகள் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்குவதற்காக முன்னின்று உழைத்தார். 1977 தேர்தலில் வென்ற அவர், தந்தை செல்வாவின் பின்னர் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவரானார்.

2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தோற்றம்பெற்றபோது, தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினரானார். 2002 ஜூன் 5ஆம் திகதி தனது 78 ஆவது வயதில் காலமானார். (ஐ-02)



## யாழ். பிரதேச கபடி போட்டி: குருநகர் பாடும்மீன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 04

யாழ். பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மகளிருக்கான கபடி போட்டியில் குருநகர் பாடும்மீன் அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான இந்தப் போட்டின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், குருநகர் பாடும்மீன், பாசையூர் அன்ரனிஸ் அணிகள் மோதின.

இரு அணிகளும் ஆக்ரோஷமாக மோதிக் கொண்ட இந்தப் போட்டியில் பாடும்மீன் அணி ஆதிக்கம் செலுத்தியது. முதல் பாதி ஆட்டத்தை அந்த அணி 20:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் தன் வசமாக்கியது.

இரண்டாவது பாதி ஆட்டத்திலும் பாடும்மீன் அணி தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்ததுடன், 22:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டது.

இறுதியில் 42:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் பாடும்மீன் அணி யாழ். பிரதேச செயலகத்தின் சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. (ஐ)

## குப்பிழான் ஐ. சண்முகனின் சிறுகதை தொகுப்பு அறிமுகம்!



வடமராட்சி, ஜூன் 04

கடந்தாண்டு மறைந்த முதுபெரும் எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகனின் சிறுகதைகள் (முழுத் தொகுப்பு) நூல் அறிமுக நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு வடமராட்சி - கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் ஜீவநதி பதிப்பகத்தின் 350ஆவது வெளியீடான குப்பிழான் ஐ. சண்முகனின் சிறுகதைகள் (முழுத்தொகுப்பு) நூலை எழுத்தாளர் கோகிலா மகேந்திரனிடமிருந்து முதல் பிரதியை குப்பிழான் ஐ. சண்முகனின் சகோதரியான ரூபாவதி தங்கராசா, சிறப்பு பிரதியை குப்பிழான் ஐ. சண்முகனின் பெறாமகனான கந்தலிங்கம் கிருபானந்த கிஷ்ஸ்ணனும் பெற்றனர்.

வெளியீட்டுரையை கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் அ. பௌநந்தி, கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக சைவ சித்தாந்ததுறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வமனோகரன், இலக்கிய விமர்சகரும் ஆசிரியருமான சி. ரமேஷ் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து குப்பிழான் ஐ. சண்முகனின் நினைவுக் குறிப்புகள் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளரும், சிரேஷ்ட மருத்துவருமான எம். கே முருகானந்தன் ஆற்றினார். இறுதியாக ஏற்புரை, நன்றியுரையை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமார் நிகழ்த்தினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமார், ஜீவநதி சஞ்சிகையின் ஆசிரியர் க. பரணீதரன் ஆகியோரை பதிப்பாசிரியர்களாகக் கொண்டு ஜீவநதி பதிப்பகத்தின் வெளியீடாக குப்பிழான் ஐ. சண்முகன் எழுதிய அனைத்து சிறுகதைகளையும் உள்ளடக்கிய தொகுப்பு நூலும் திருமதி புனிதவதி சண்முகலிங்கனை பதிப்பாசிரியராக கொண்டு ஜீவநதி பதிப்பகத்தின் வெளியீடாக குப்பிழான் ஐ. சண்முகனின் இரசனைக் குறிப்புகள் நூலும் ஏற்கனவே ஐ. சண்முகனின் முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வின் போது குப்பிழானில் வைத்து வெளியீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 04.06.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், வைகாசி 22
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழர்களின் தேவை

விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியலை தீர்மானித்த காலத்தில் தமிழர்களின் அரசியல் உலகால் உற்றுநோக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அமைப்பின் இராணுவ பலமே அதற்கான காரணமாகும். 2009இல் அந்தப் பலம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. ஒட்டுமொத்த உலக ஆதரவையும் விடுதலைப் புலிகள் இழந்திருந்த சூழலில்தான் இலங்கையால் இராணுவ வெற்றியை பெற முடிந்தது. ராஜபக்ஷக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை தோற்கடித்தார்கள் என்பது சிங்கள மக்களால் நம்பப்பட்ட ஒரு கதையாக இருப்பினும்கூட உலகின் ஆதரவில்லாது இருந்திருந்தால் அவ்வாறான ஒரு வெற்றியை ராஜபக்ஷக்கள் பெற்றிருக்கவே முடியாது. விடுதலைப் புலிகள் ஜனநாயக நீரோட்டத்துக்குள் வரவேண்டும் என்பதே மேற்குலகின் எதிர்பார்ப்பாக இருந்தது. எனினும், மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் வெற்றியானது மேற்குலகின் சமாதான முன்னெடுப்பு களை சீர்குலைத்தது.

இவ்வாறானதொரு நிலையில் அனைவரின் கோபமும் விடுதலைப் புலிகள் மீதே திரும்பியது. இந்தப் பின்புலத்தில்தான் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் கனடா ஆகிய நாடுகள் விடுதலை புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டன. புலம்பெயர் சமூகத்தால் எதனையும் செய்ய முடியவில்லை. யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கழிந்த பின்னர்கூட விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படவில்லை. மேற்குலக நாடுகளில் தமிழ் மக்கள் உரிமைகள் சார்ந்து சுதந்திரமாக செயல்பட முடிந்தாலும்கூட விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் மேற்குலகம் ஒன்றாக நோக்கவில்லை. இரண்டும் வேறு என்றே கருதுகின்றது. இதனை புலம்பெயர் சமூகம் எந்தளவுக்கு புரிந்து கொண்டிருக்கின்றது - அவற்றால் புரிந்துகொள்ள முடிந்ததா என்பது இப்போதும்கூட ஒரு கேள்வியாகவே தொடர்கின்றது. இது ஒரு வகையில் துரதிர்ஷ்டவசமானது.

கடந்த பதினைந்து வருடகால அரசியல் அனுபவங்களை தொகுத்து நோக்கினால், தாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக்கைகளும் சரி - புலம்பெயர் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக்கைகளும் சரி - ஒரு சிறிய முன்னேற்றத்தைக்கூட ஏற்படுத்தவில்லை. சர்வதேச அழுத்தங்கள் என்னும் சொற்கள் உச்சரிக்கப்பட்டனவே தவிர, அதனால் இலங்கை அரசாங்கம் சிறிதும் இறங்கி வரவில்லை. இது எதனைக் காட்டுகின்றது? ஒன்று சர்வதேச கட்டமைப்புகள் எவையும் சம்பூரண நிவாரணிகள் அல்ல - அவற்றால் அவ்வாறு செயல்படவும் முடியாது.

அடிப்படையில் அவைகள் மிகவும் பலவீனமானவை. இது ஒன்று என்றால் பலம் பொருந்திய நாடுகளைப் பொறுத்தவரையில் இலங்கையில் சிங்கள பெரும்பான்மையை ஓர் எல்லைக்கு மேல் விரோதித்துக் கொள்ளக்கூடாது என்னும் அடிப்படையில்தான் அவர்களின் அணுகுமுறைகள் இருக்கின்றன. தமிழ் மக்களை ஒரு தேவையான மக்கள் கூட்டமாக எவருமே கருதவில்லை. அவ்வாறு கருதியிருந்தால் தமிழ் மக்களின் கோரிக்கைகள் இந்தளவுக்கு புறந்தளப்பட்டிருக்காது. எனவே, முதலில் தமிழ் மக்கள் தேவையுள்ள மக்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். அதனை எவ்வாறு நிரூபிப்பது? நிரூபிக்கும் ஆற்றல் தமிழரிடம் உண்டா? இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது. மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இலங்கைத் தீவின் தமிழ் மக்கள் ஒரு தவிர்க்க முடியாத மக்கள் கூட்டம் என்பதை ஜனநாயக தளத்தில் நிறுவ வேண்டியிருக்கின்றது.

## டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த 7 பேருக்கு ரூ. 70 ஆயிரம் தண்டம்!

யாழ்ப்பாணம், ஜுன் 04

டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த 7 பேருக்கு 70 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன், வழக்கில் முன்னிலையாகாத 4 பேருக்கு அழைப்பாணையும் பிறப்பித்தது யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றம்.


டெங்கு நோய் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் கோப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நீர்வேலி பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். உதயபாலா தலைமையில் நடத்தப்பட்ட வீட்டு தரிசிப்பின்போது, 11 வீடுகளின் உரிமையாளர்கள் நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

அவர்களுக்கு எதிராக யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற வழக்கில் 7 பேர் மன்றில் முன்னிலையாகினர்.

குற்றத்தை ஏற்றுக்கொண்ட 7பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம் 70 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தார் நீதிவான். அத்துடன், வழக்கில் முன்னிலையாகாத 4 பேருக்கும் அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

## இந்திய துணைத் தூதரக ஏற்பாட்டில் நெடுந்தீவில் சர்வதேச யோகா தினம்!

யாழ்ப்பாணம், ஜுன் 04




யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச யோகா தினம் முதன்முறையாக நெடுந்தீவில் நடைபெற்றது.

கடந்த சனிக்கிழமை நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியில் சுமார் 250 மாணவர்கள், ஆசிரியர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

பாசையூர் ஆயுர்வேத வைத்திய அதிகாரி வைத்தியர் அனுசுயா, கரவெட்டி பிராந்திய சித்த மருத்துவ மனை வைத்தியர் பிரபாகரன் ஆகியோர் யோகாவின் நன்மைகள் பற்றிய நுண்ணறிவு விளக்கங்களை வழங்கினர்.

துணைத் தூதரகத்தில் யோகா பாடம் நடத்தும் யோகா ஆசிரியர் உமாசுதன், அவரின் மாணவர்கள் மற்றும் இந்தியா கோர்னர் மாணவர்களின் ஆதரவுடன் யோகா செயல்பாட்டுக்கு தலைமை தாங்கினார்.

நிகழ்வில் பங்கேற்ற துணைத் தூதுவர் சாய் முரளி, "இதுபோன்ற முதல் யோகா நிகழ்வை நடத்துவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும், மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் யோகாவை இணைக்க ஊக்குவித்தார். ஐ. சி. சி. ஆர். இந்திய உதவித் தொகையின் கீழ் கிடைக்கும் வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு தெரிவித்த அவர், இந்த கல்வி சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாணவர்களை வலியுறுத்தினார். (ஐ)

## காற்றில் பறந்தது முன்பள்ளி கூரை!

வடமராட்சி, ஜுன் 04




வடமராட்சி கிழக்கின் நாகர்கோவிலில் மழையுடன் வீசிய கடும் காற்றால் செபஸ்ரியன் முன்பள்ளியின் கூரை கடுமையாக சேதமடைந்ததாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித் துள்ளார்.

நேற்று மாலை வரையான 24 மணி நேரத்தில் யாழ். மாவட்டத்தில் 29.3 மி. மீற்றர் மழைவீழ்ச்சி பதிவானதாகக் கூறினார்.

கடும் இடி மின்னல் தாக்கம், பலத்த காற்றும் தொடரும் என்பதால் பொதுமக்கள் பாதிப்புகளை குறைத்துக் கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தினார். (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# “தலைவரே பாதை அமைத்தீர்கள் பயணத்தைத் தொடர்கின்றோம்”

## கருணாநிதி பிறந்த தினத்தில் முதல்வர் ஸ்டாலின்



சென்னை, ஜூன் 04

மறைந்த முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் நூற்றாண்டு நிறைவு விழா, 101 ஆவது பிறந்த நாள் நேற்றுக் கொண்டாடப் பட்டது. இதை முன்னிட்டு தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின், தனது சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்ட கவிதையில்,

தலைவரே, பாதை அமைத் தீர்கள் பயணத்தைத் தொடர் கின்றோம். தலைவர்களுக்கெல் லாம் தலைவர், நவீன தமிழ கத்தை செதுக்கிய சிற்பி, மு. கருணாநிதி சூல் கொண்ட நாள் ஜூன் 3. அதிலும் 2024 ஆம் ஆண்டு என்பது கருணாநிதிக்கு நூற்றாண்டு.

ஐம்பது ஆண்டுகள் தி. மு. க.வின் தலைவர். 5 முறை தமிழக முதல்வர். சட்டப் பேரவை, சட்ட மேலவை உறுப்பினராகவும் இருந்தார், எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்திருக்கிறார்.

திரையுலகில், கதை, வசனம், பாடல்கள் எழுதினார், திரைப் படங்களைத் தயாரித்தார், நாடகங்களைத் தயாரித்தார், நடிக்கவும் செய்தார். பத்திரிகை உலகில், பத்திரிகை நடத்தினார், ஆசிரியராக இருந்தார், எழுத்தாளராகவும், பத்திரிகை யாளராகவும் இயங்கினார். இலக்கியம் என்றால், கவிஞர், சிறுகதை ஆசிரியர், நாவலாசிரியர், உரையாசிரியர் என அனைத்திலும் முத்திரை பதித்தார்.

இன்று நாம் பார்க்கும் எத்தனையோ திட்டங்கள் அவரால் உருவாக்கப்பட்டவை. ஒரு துளி மையில் இந்த மாநிலத்தை வளர்த்தார். அதனால்தான் நிறை வாழ்க்கைக்குப் பிறகும் நினைவு கூரப்படுகிறார்.

அவருக்கு நமது நன்றியின் அடையாளமாக, மதுரையில் நூலகம், சென்னையில் பல் நோக்கு மருத்துவமனை, திருவாரூரில் கோட்டம், அலங்கா நல்லூரில் ஏறுதழுவுதல் அரங்கம், சென்னையின் நுழை வாயிலில் பேருந்து முனையம் கட்டினோம். வங்கக்கடலோரம், நினைவகம் நிலை நாட்டினோம்.

நீங்கள் இருந்து செய்ய வேண்டியதை, உங்கள் மகனாக நான் செய்து வருகிறேன். எதிர் கொண்ட எல்லா தேர் தல்களிலும் நாங்களும் வென்று காட்டியிருக்கிறோம். நீங்கள் உருவாக்கிய நவீன தமிழகத்தை உன்னத தமிழகமாக உயர்த்தி காட்டி வருகிறோம். இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் திரும்பிப் பார்க்கும் திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறோம். உலக நாடுகளோடு போட்டி போடும் அளவுக்கு தொழில் வளர்ச்சியைக் கண்டு வருகிறோம். கம்பீர தமிழகத்தை நாங்கள் உருவாக்கிக் காட்டி வருகி றோம். நீங்கள் பாதை அமைத் தீர்கள், நாங்கள் பயணத்தைத் தொடர்கின்றோம் - இவ்வாறு முதல்வர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# விமானத்தில் வெடிகுண்டு மிரட்டல்!

## பயணிகளை கீழே இறக்கி சோதனை

சென்னை, ஜூன் 04

சென்னையிலிருந்து கொல்கத்தா செல்லும் விமானத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக வந்த மிரட்டலை தொடர்ந்து, விமானத்தில் இருந்த 168 பயணிகளை கீழே இறக்கிவிட்டு வெடிகுண்டு நிபுணர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் தீவிர சோதனை நடத்தினர்.

சென்னை துரைப்பாக்கத்தில் இண்டிகோ ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்தின் அலுவலகம் உள்ளது. அந்த அலுவலகத்துக்கு நேற்றுத் திங்கட்கிழமை காலை வந்த மின்னஞ்சலில் சென்னையிலிருந்து காலை கொல்கத்தா செல்லும் இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதையடுத்து உடனடியாக சென்னை விமான நிலைய இண்டிகோ அலுவலகத்துக்கும், விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 8. 30 மணிக்கு 168 பயணிகளுடன் கொல்கத்தாவுக்கு புறப்படத் தயார் நிலையில் இருந்த இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானத்துக்கு தகவல் தெரிவித்த பாதுகாப்பு அதிகாரிகள், பயணிகளை கீழே இறக்கி ஓய்வு அறைகளில் அமர வைத்தனர்.

இதையடுத்து, வெடிகுண்டு நிபுணர்கள் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் மத்திய உளவுப் பிரிவு அதிகாரிகள் விமானத்துக்குள் சென்று தீவிர சோதனையில் ஈடுபட்டனர். ஆனால், வெடிகுண்டுகள் எதுவும் இல்லை. இது புரளி என்பது தெரியவந்தது. இதையடுத்து, காலை 10. 40 மணிக்கு 168 பயணிகளுடன் விமானம் சென்னையிலிருந்து கொல்கத்தாவுக்கு புறப்பட்டது. (எ)

# சாதி, மத ரீதியாக வாக்கு சேகரிப்பதை கண்காணிக்க ஆணைக்குழு வேண்டும்

## சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு

சென்னை, ஜூன் 04

சாதி, மத, மொழி ரீதியாக வாக்குச் சேகரிக்கும் ஊழல் நடவடிக்கையை கண்காணிக்க ஓய்வு பெற்ற நீதிபதிகள் அடங்கிய சுதந்திரமான ஆணைக்குழு அமைக்கக் கோரிய வழக்கில், இந்தியத் தேர்தல் ஆணைக்குழு பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மகிமைதாஸ் என்பவர் தாக்கல் செய்திருந்த பொதுநல மனுவில், “சாதி, மதம் மற்றும் மொழி ரீதியாக வாக்குகளை சேகரிப்பது ஊழல் நடவ டிக்கை என்பதால் அதை ஒருபோதும் அனுமதிக் கக்கூடாது.

வெறுப்புப் பேச்சுகளைக் கட்டுப்படுத்த மாநில அரசுகளும், தேர்தல் ஆணைக்குழுவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் தீர்ப்பளித்துள்ளது. அரசியல் கட்சிகள் மற்றும் அந்தக் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகள் தங்களின் அரசியல் சுயலாபத்துக்காக சாதி, மதம், மொழி ரீதியாக வாக்காளர்கள் மத்தியில் பிரிவி னையை ஏற்படுத்தி வருகின்றன.

இது தொடர்பான உச்ச நீதிமன்ற தீர்ப்புகள் குறித்து பொதுமக்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் தெரிவிக்க வேண்டும். அந்தத் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க, ஓய்வு பெற்ற நீதிபதிகள், மனித உரிமை ஆர்வலர்கள் அடங்கிய சுதந்திரமான ஆணைக்குழு அமைக்க தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட வேண்டும்” என அதில் கோரியிருந்தார். இந்த வழக்கு பொறுப்பு தலைமை நீதிபதி ஆர். மகாதேவன், நீதிபதி முகமது ஷபீக் ஆகியோர் அடங்கிய அமர்வில் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், இந்த மனுவுக்கு தேர்தல் ஆணைக்குழு ஆறு வாரங்களில் பதிலளிக்க உத்தர விட்டு, விசாரணையை ஒத்திவைத்தனர். (எ)

ஆனி - 04 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 22
நல்ல நேரம் : 02.52 - 04.22
ராகு காலம் : 10.22 - 11.52
திதி : திரயோதசி




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள்.

**இடபம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். உறவினர்கள், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் வேலையாட்களுடன் விவாதம் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் மனம்விட்டுப்பேசுவது நல்லது. மனதிற்கு இதமான செய்தி வரும். உங்களால் வளர்ச்சி அடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். உயரதிகாரிகளின் நட்பு கிடைக்கும்.

**கடகம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பழைய உறவினர், நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி தங்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங்கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷயங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம்.

**துலாம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். தாயார் ஆதரித்துப் பேசுவார்.நம்பிக்கை துளிர்விடும் நாள்.

**விருட்சிகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உறவினர், நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை புரிந்து கொள்வீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**மகரம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். உழைப்பால் உயரும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் பற்றுவரவு உயரும். வெற்றிக்கு வித்திடும்நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உறவினர்கள் மதிப்பார்கள். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். புதிய பாதை தெரியும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல்கள் ஈராண்டுகளுக்கு ஒத்திவைக்கப்படவேண்டும்!

## மீண்டும் கூறுகிறார் பாலித ரங்கே பண்டார




கொழும்பு, ஜூன் 04

**"ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் என்பன ஈராண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் தொடர்ந்து இருக்கின்றேன். இது விடயம் தொடர்பான எனது அறிவிப்பில் தவறு இருப்பதாக உணரவில்லை." - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார மீண்டும் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டே நான் இந்த அறிவிப்பை விடுத்தேன். அது சரியான - அதேபோல அறிவிக்க வேண்டியதொரு கருத்தாகும். அப்படியானதொரு கருத்தை வெளியிட்டதால் நான் மனக் கவலையில் இல்லை.

நாட்டுக்கு தேவையானதொரு விடயத்தையே நான் கூறியுள்ளேன்.

அதேவேளை, தமிழ்பேசும் கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியில் தொடர வேண்டும் என்பதையே விரும்புகின்றன - என்றார். (அ)

# பிரிவினைகள் ஊடாக அபிவிருத்தி ஏற்படாது!

## கூறுகிறார் வஜிர அபேவர்த்தன

கொழும்பு, ஜூன் 04

ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாக மாத்திரமே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும். பிரிவினைகளின் ஊடாக அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியாது என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு வங்குரோத்து நிலையில் இருந்து இன்னும் மீளவில்லை. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பெரும்பாலும் இந்த மாத இறுதிக்குள் வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை முழுமையாக விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

ஒன்றிணைந்து செயற்படுவதன் ஊடாக மாத்திரமே நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும். பிரவினைகளின் ஊடாக அபிவிருத்தியை ஏற்படுத்தமுடியாது.

நாடு ஸ்தரதன்மை அடைந்து வரும் நிலையில் ஜனாதிபதி முன்னெடுத்துவரும் எவரேனும் இடையூறு விளைவித்தால் நாடு மீண்டும் அதலபாதாளத்துக்கு செல்லும். அதிலிருந்து நாட்டை மீட்டெடுக்க முடியாமல் போகும் - என்றார். (அ)

# ஐ.நா. வதிவிட பிரதிநிதி யாழ்ப்பாணம் வருகை





யாழ்ப்பாணம், ஜூன் 04

ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ் யாழ். மாவட்டத்திற்கு நேற்று விஜயம் செய்ததுடன் பல்வேறு சந்திப்புக்களிலும் ஈடுபட்டார்.

இந்நிலையில், நல்லை ஆதீனத்துக்குச் சென்ற ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளை சந்தித்து ஆசி பெற்றதுடன், நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு விஜயம் செய்து பார்வையிட்டதுடன் அங்கு கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

இதன்போது இந்தியா - இலங்கை இடையேயான பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சிறுவன் தன்வந்தைச் சந்தித்த ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி தனது பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பெண்ணிடம் நகை அறுத்த பொலிஸ்காரர் கைதானார்!

கொழும்பு, ஜூன் 04

வாதுவ பிரதேசத்தில் நடந்து சென்ற பெண்ணிடம் தங்க நகையை திருடிய குற்றச்சாட்டில் வாதுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பெண்ணின் நகையை அறுக்க முற்பட்டபோது, கொள்ளையனுடன் அந்தப் பெண் சண்டையிட்டுள்ளார். அதன்போது பிரதேசவாசிகள் ஒன்றிணைந்து சந்தேக நபரை பிடித்து வாதுவ பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேக நபர் வாதுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சார்ஜன்ட் என அடையாளம் காணப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மண்சரிவு அபாயத்தால் மூடப்பட்ட வீதி



கொழும்பு, ஜூன் 04

மண்சரிவு அபாயம் காரணமாக பெலவத்த - நெலுவ பிரதான வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த வீதியை பயன்படுத்தும் சாரதிகள் முடிந்தவரை மாற்று வழிகளை பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (அ)

# பிரதான ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகளில் தாமதம்!

கொழும்பு, ஜூன் 04

சமிக்ஞைக் கோளாறு காரணமாக பிரதான ரயில் மார்க்கத்தில் ரயில் சேவைகள் தாமதமடைந்துள்ளதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல்லேவெல - மீரிகம ரயில் நிலையங்களுக்கு இடையிலும், கம்பஹா - வெயாங்கொடை ரயில் நிலையங்களுக்கு இடையிலும் சமிக்ஞைக் கோளாறு ஏற்பட்டுள்ளதாக ரயில் திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொலகே தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல ரயில் நிலையங்களுக்கு இடையில் மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளமையினால் ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகவும் என்.ஜே.இந்திபொலகே குறிப்பிட்டார். (அ)

# தேர்தல்களை ஒத்திவைக்கும் முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்பு

## ஐ.நா. அலுவலகத்திடம் சிவில் சமூகம் கடிதம்

கொழும்பு, ஜூன் 04

தேர்தல்களை பிற்போடுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்திடம் கடிதமொன்றை கையளித்துள்ளனர்.

பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களை ஒத்திவைப்பது தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது குறித்து ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்க பண்டார தெரிவித்துள்ளதை தங்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள சிவில் சமூக பிரதிநிதிகள், பாலித ரங்க பண்டாரவின் கருத்தினை ஜனநாயக விரோத கருத்து என குறிப்பிட்டுள்ளனர்.

மக்கள் போராட்ட பிரஜைகள் அமைப்பு, தேசிய சிவில் அமைப்புகளின் முன்னணி, மின்சார பாவனையாளர்கள் சங்கம் உட்பட பல அமைப்புகள் இணைந்து இந்த கடிதத்தை இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்திடம் கையளித்துள்ளனர்.

மே 28ஆம் திகதி ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் இலங்கை மக்களின் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக தங்கள் கடிதத்தில் தெரிவித்துள்ள சிவில் சமூக பிரதிநிதிகள், இதன் காரணமாக சமூகத்தில் மிகவும் முரணாண நிலை தோன்றியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல்களிற்காக காத்திருக்கும் மக்களிற்கு ஐக்கிய தேசிய கட்சியின் செயலாளரின் தெரிவித்துள்ள விடயம் மிகவும் பாரதூரமானது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பாலித ரங்க பண்டாரவின் இந்த அறிவிப்பிற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன என தெரிவித்துள்ள சிவில் சமூக பிரதிநிதிகள், தேர்தல் ஆணையாளரை அமெரிக்க தூதுவர் சந்தித்துள்ளமை மிக முக்கியமானது. இலங்கையின் ஜனநாயகம் குறித்து நம்பகத்தன்மைமிக்க பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக பொது மக்கள் கருதுகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# ஐக்கிய தேசிய கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை!

## தேசிய மக்கள் சக்தி கூறுகிறது



கொழும்பு, ஜூன் 04

"ஐக்கிய தேசியக்கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை" என தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஐந்து வருடங்களில் ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பிலேயே இந்த தீர்மானம் காணப்படுகின்றது.

எனவே அரசியலமைப்பின் பிரகாரம் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் நிச்சயம் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை. அதுபோன்றே பாராளுமன்றிலும் உறுப்பினர் ஒருவர் மாத்திரமே உள்ளார். தேர்தலில் தோல்வியடைவதை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நன்கு அறிவார் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடக்கும்!

## எஸ்.எம். சந்திரசேன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 04

**ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக இடம்பெறும் என்பதை ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்துள்ளார்" என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாம் தெரிவு செய்த ஜனாதிபதியே தற்போது ஆட்சியில் உள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா என்பது தொடர்பாக அடுத்தவாரம் அவர் தனது தீர்மானத்தை அறிவிப்பார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தனித்து தீர்மானம் மேற்கொள்ளமாட்டார். அனைவருடனும் கலந்துரையாடியே தீர்மானம் மேற்கொள்வார். ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக இடம் பெறும் என்பதை ஜனாதிபதி ஏற்கனவே அறிவித்துள்ளார்- என்றார். (அ)

# மூடப்பட்ட தெற்கு அதிவேக வீதியின் கடுவலை நுழைவு!

கொழும்பு, ஜூன் 04

கடுவலைப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு நிலை காரணமாக தெற்கு அதிவேகப் பாதையின் கடுவலை நுழைவுப் பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

நாட்டில் பெய்து வரும் கன மழை காரணமாக களனி ஆற்றின் பல்வேறு இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, ஆற்றோரப் பிரதேசங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

கடுவலையின் பியகம பிரதான பாதை உள்ளிட்ட பல பிரதேசங்களும் இவ்வாறு வெள்ளத்தினால் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

தெற்கு அதிவேகப் பாதைக்கான நுழைவுப் பாதையும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதனையடுத்து தெற்கு அதிவேகப் பாதையின் கடுவலை நுழைவுப் பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.




இதன் காரணமாக கடுவலையில் இருந்து கடவத்தை வரை செல்லவோ, கடவத்தையில் இருந்து கடுவலை வழியாக வெளியேறவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இடைக்கால வரவு-செலவு திட்டம்

கொழும்பு, ஜூன் 04

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி தேர்தலின் பின்னர் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தினை தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகள் மற்றும் இலக்குகளுக்கு ஏற்ப இந்த இடைக்கால வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படவுள்ளதால், வரவு - செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடு இல்லை எனவும், இதன் காரணமாக இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை தயாரிப்பது பொருத்தமானது எனவும் நிதி அமைச்சின் அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் ஜனாதிபதி விளக்கமளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், தேர்தல் காலத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வேலைத்திட்டத்தின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தேவையான இலக்குகளை அடைவதற்கும் அவசியமான ஏற்பாடுகளை ஜனாதிபதி தயார் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், எதிர்வரும் டிசெம்பர் மாதம் மேற்கொள்ளப்படவுள்ள சர்வதேச நாணய நிதியத்துடனான ஊழியர் மட்ட உடன்படிக்கையை சிக்கல் இன்றி நிறைவு செய் யக்கூடிய வகையில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (அ)

# அரகலய போராட்டத்தின் பின் மீண்டும் தலைதூக்கும் ஊழல்!

## அரசியல்வாதிகளை சாடுகிறார் அநுர

கொழும்பு, ஜூன் 04

"அரகலய "வுக்குப் பின்னர் பின்வாங்கிய ஊழல் மற்றும் ரவுடித்தனமான அரசியல்வாதிகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரகலயவின் உண்மையான அபிலாஷைகள் நிறைவேற வேண்டுமானால், மக்கள் எழுச்சியின் உண்மையான நோக்கத்தை பேணுகின்ற அரசாங்கமொன்று நிறுவப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குருநாகலில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் இளைஞர் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அவர்-

"2022 ஆம் ஆண்டு மக்கள் எழுச்சியின் உண்மையான அபிலாஷைகளை நிலைநிறுத்தக் கூடிய ஒரே அரசியல் சக்தி மற்றும் அரசாங்கம் தேசிய மக்கள் சக்தி மாத்திரமே.

அரசியல்வாதிகள் அரகலயவில் இருந்து பாடம் கற்கவில்லை. மாறாக போதைக்கு அடிமையானவர்களின் எழுச்சி எனக்கூறி மக்களின் எழுச்சியை அவமானப்படுத்துகின்றனர்.

மக்கள் குறிப்பாக இளைஞர்கள் எந்தவொரு அரசியல் சக்தி மீதும் விசுவாசம் இன்றி பொதுவான அபிலாஷைகளுடன் வீதிக்கு இறங்கினர். இதனை ஆட்சியாளர்கள் உணரவில்லை.

மோசடி மற்றும் ஊழல் அற்ற ஒழுக்கமான, நீதியான நாட்டை மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ஆனால், அரசியல்வாதிகள் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி மக்களை அடக்கியாள ஆரம்பித்துள்ளனர்.

அரச சொத்துகளை விற்க முனைவதுடன், அரகலயவின் பின்னரும் பழைய பாதையிலேயே பயணிக்கிறார்கள் - என்றார். (அ)

# கொழும்பில் பிரதான பாடசாலைகளுக்கு அருகில் 40 அபாயகரமான மரங்கள்!

## மாணவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல்

கொழும்பு, ஜூன் 04

தலைநகர் கொழும்பில் பிரதான பாடசாலைகளுக்கு அருகில் அதி அபாயமான 40 மரங்கள் காணப்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் கொழும்பு மாநகர சபைக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக அகில இலங்கை மாவட்ட பாடசாலை சிறுவர் போக்குவரத்து சங்கத்தின் தலைவர் என். எம்.கே. ஹரிச்சந்திர பத்மசிறி தெரிவித்தார்.

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அண்மையில் நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களிலும் மரங்கள் முறிந்து விழுந்த காரணத்தினால் தமது சங்கம் இது தொடர்பில் அறியப்படுத்தியதாக அவர் கூறினார்.

பாடசாலை நிறைவடைந்தவுடன் மாணவர்கள் தமக்கான போக்குவரத்து சாதனம் வருகை தரும் வரையில் இவ்வாறு அபாயமான மரங்களுக்கு கீழ் தரித்து நிற்பதாகவும் அதன் காரணமாக அவர்களுடைய உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வேன் மீது மரமொன்று முறிந்து விழுந்தால் காப்பீடு மூலம் அதனை மீளமைக்க முடியும் எனினும் பாடசாலை மாணவர் ஒருவர் மீது மரம் முறிந்து விழுந்தால் அது பெற்றோர்களுக்கு மீளப்பெற முடியாத நட்டம் என அவர் குறிப்பிட்டார். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள் ரணிலுடன் இணைவது பொய்!

## மறுக்கிறார் திஸ்ஸ அத்தநாயக்க

கொழும்பு, ஜூன் 04

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் தலைமையிலான அரசாங்கத்துடன் இணையப்போவதாக வெளியாகும் செய்திகள் முற்றுலுமாக பொய்யானது என கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

அரசியல் இலாபங்களை ஈட்டும் நோக்கில் சில அரசியல் கட்சிகள் இதுபோன்ற வதந்திகளை பரப்பி வருவதாக அவர் கூறினார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் 20 உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்தால் பொதுஜன பெரமுன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்குமா என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச -

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 20 உறுப்பினர்கள் இணைந்தால் ஆதரவளிப்போம் என்பதைவிடவும் கொள்கை ரீதியிலான விடயங்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் நாம் இன்னும் கலந்துரையாடலில் ஈடுபட வேண்டிய தேவை உள்ளது.

நாங்கள் நபர்களை வைத்து அல்ல. கொள்கைகளை வைத்தே யாருக்கு ஆதரவு தெரிவிப்போம் என்பதை தீர்மானிப்போம்.

ஆகவே, கொள்கை ரீதியிலான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி வருகிறோம் ஏனைய காரணங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் கலந்துரையாடுவோம்.

எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து சிலர் அரசாங்கத்துடன் இணையப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் கூறி வந்தனர், ஆகவே அவர்கள் அது தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் ஒன்றை மேற்கொள்வார்கள்- என்றார். (அ)

# மாமாவை வெட்டி கொன்ற மருமகன்!

கொழும்பு, ஜூன் 04

மாதம்பே, செம்புகட்டிய பிரதேசத்தில் மருமகன் ஒருவர் அவரது மாமாவை வாளால் வெட்டிக் கொலை செய்துள்ளதாக மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

நரசிம்ம கேசர பண்டார நாயக்க சாம்சன் ஜயவீர என்ற 56 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சகோதரியின் மகனே இந்த கொலையைச் செய்துள்ளதாகவும், சந்தேக நபரும் இறந்தவரின் வீட்டுக்கு அருகில் வசித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பழைய தகராறு காரணமாக உயிரிழந்தவருக்கும் சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தின் பின்னர் சந்தேக நபர் வாளால் வெட்டிக் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உக்ரைன் போர்க் களத்தில் மகிந்தவின் மெய்க்காவலர்

## 15 பேர் கொண்ட குழுவை வழிநடத்தும் லஹிரு

கொழும்பு, ஜூன் 04

**உக்ரைன் - ரஷ்ய போர் களத்தில் இலங்கைப் படையில் இருந்து ஓய்வுபெற்ற பலர் கூலிப் படைகளாக இணைந்துள்ள விவகாரம் தற்போது பேசுபொருளாகியுள்ளது.**

**இரு நாடுகளின் சார்பில் போரிடும் இலங்கையர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது இந்த விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் தலையிட்டுள்ளது.**



**இவ்வாறான பின்னணியில் முன்னாள் பிரமதர் மகிந்த ராஜபக்ஷவின் மெய்ப்பாது காவலராக இருந்த ஒருவர் தற்போது உக்ரைனுக்கு ஆதரவாக போரிட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் மகிந்த ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவலராக இருந்த லஹிரு காவிந்த அத்துருசிங்க என்பவரே உக்ரைனுக்கு ஆதரவாக போரிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க் களத்தில் இருந்தவாறே இலங்கை ஊடகவியலாளர் ஒருவருக்கு வழங்கிய செவ்வியில் அவர் பல்வேறு விடயங்களை பகிர்ந்துகொண்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது,

"உக்ரைன் படையில் வெளிநாட்டினரை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 பேர் கொண்ட குழுவின் தலைவராக செயற்படுகின்றேன். இந்த குழுவில் பல்வேறு நாடுகளை சேர்ந்தவர்கள் இருக்கின்றனர்.

இலங்கையில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தின்போது அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவலராக இருந்திருந்தேன். சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் மெய்ப்பாதுகாவலராக பணியாற்றினேன்.

மெய்ப்பாதுகாவல் வழங்கிய அந்த காலப்பகுதியில் நடந்த எதையும் கூறமுடியாது. அது நெறியும் கிடையாது. என்னை தனது குடும்பத்தில் ஒருவரைப் போலவே மகிந்த ராஜபக்ஷ பார்த்தார்.

இந்நிலையில், எதிர்காலத்தில் செய்யவேண்டிய அனைத்தையும் இப்போதே திட்டமிட்டுள்ளேன். ரஷ்யாவுக்கு எதிரான போரில் இதுவரையில் காயம் எதுவும் ஏற்படவில்லை.

போர் குறித்த அச்சங்களும் எனக்கில்லை. எனது குழு மீது எனக்கு முழு நம்பிக்கை இருக்கின்றது. எனக்கு எது நேர்ந்தாலும் அவர்கள் என்னை கைவிடமாட்டார்கள்.

அதேபோல் தனது குழுவில் உள்ள எவருக்கும் எது நடந்தாலும் முதல் ஆளாக நான் அங்கிருப்பேன். இலங்கை இராணுவத்தில் கற்றுக்கொண்ட நுட்பங்களை கொண்டு எனது குழுவினருக்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றேன்.

கடந்த எட்டு மாதங்களால் எந்தவொரு பாதிப்புகளும் இன்றி போர்களத்தில் செயற்பட்டு வருகின்றேன். வெளிநாட்டு இராணுவத்தில் இணைய வேண்டும் என்ற விருபத்தின் பேரிலேயே உக்ரைன் இராணுவத்தில் இணைந்து கொண்டேன்.

நான் ஒருபோதும் கூலிப் படையாக இங்கு இணையவில்லை. எனது முழு விருப்பத்தின் பேரிலேயே உக்ரைன் இராணுவத்தில் இணைந்து கொண்டேன்.

எவ்வாறாயினும் இலங்கை இராணுவத்தில் இருந்து நான் அதிகாரபூர்வமாக விலகவில்லை. முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட யாருக்கும் இந்த விடயம் தெரியாது.

உக்ரைனுக்கு எதிராக போரிட்ட இரண்டு இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் குறித்து உக்ரைன் பாதுகாப்பு அமைச்சிடம் கேட்கமுடியாது.

அவ்வாறு கேட்டால் எதிரி நாட்டுப் படையினருடன் தொடர்புவைத்துள்ளதாக சந்தேகிப்பார்கள். எவ்வாறாயினும், அவர்கள் எங்களுக்கு எதிராக போரிட்டவர்கள் ஆவர்.

யாரும் ரஷ்யாவை பாதுகாக்கும் நோக்கில் அந்நாட்டு படையில் இணைந்து கொள்ளவில்லை. தமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள தேவையான பணத்திற்காகவே இணைந்துள்ளனர்.

50 நாட்கள் போர்க்களத்தில் இருந்தால் 14 நாட்கள் விடுமுறை கிடைக்கும். ஆனால் நான் அந்த விடுமுறையை இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை.

எவ்வாறாயினும் விதியை மீறி எதுவும் நடக்காது - என்றார். (அ)

# ஜீவனுக்கு எதிராக விசாரணை

கொழும்பு, ஜூன் 04

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் செயலாளர் நாயகமும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தமது கட்சியின் ஆதரவாளர்கள் குழுவுடன் நுவரெலியா பொலிஸாருக்கு முன்பாக நடந்துகொண்ட முறை தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பாதுகாப்பு அதிகாரிகளின் மூவரின் துப்பாக்கிகளும் உயர்நிலை அதிகாரிகளின் உத்தரவின் பேரில் தலவாக்கலை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு , கையகப்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் சில மணித்தியாலங்களின் பின்னர் அதே அதிகாரிகளிடமே திருப்பி அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# துமிந்தவுக்கு பொது மன்னிப்பு சஜித் பிரேமதாச உடன்படார்!

## கூறுகிறார் ஹிருணிகா

கொழும்பு, ஜூன் 04

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்க ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச உடன்படமாட்டார் என தாம் நம்புவதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

இருப்பினும், துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு சஜித்தை சுற்றியுள்ள ஏனையவர்கள் சம்பந்தப்பட்ட நபர்களுடன் ஒப்பந்தம் செய்வதற்கு அவரை சமாதானப்படுத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தாம் வேண்டுமா அல்லது ஏனையவர்கள் வேண்டுமா என்பதை கட்சி தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய வழங்கிய பொது மன்னிப்பு உரிய நடைமுறைகளை பின்பற்றாது வழங்கியமையால் தம்மால் அதனை மாற்றியமைக்க முடிந்தது எனவும் ஹிருணிகா பிரேமச்சந்திர நினைவு கூர்ந்தார். (அ)

# இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக தலைமன்னார் திரும்பியவர்கள் கைது!

மன்னார், ஜூன் 04

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக படகில் தலைமன்னார் ஊர்மனை பகுதிக்கு வருகை தந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தலைமன்னார் பொலிஸார் தெரிவித்த னர்.

இலங்கையைச் சேர்ந்த ஐவரே நேற்றுக் காலை தலைமன்னார் ஊர்மனை கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த 5 நபர்கள் கடற்படையினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் னர் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் தாழ்வுபாடு, தலைமன்னார், வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 37,39,24,26 மற்றும் 38 வயதுடைய ஆண்கள் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த 5 பேரும் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு கடந்த சில வருடங்களுக்கு முன் சென்றுள்ள நிலையில் இந்தியாவின் பல்வேறு இடங்களில் வசித்து வந்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த 5 சந்தேக நபர்கள் தற்போது தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதோடு, விசாரணைகளின் பின்னர் குறித்த நபர்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# ரயிலில் திடீர் தீப்பரவல்

கொழும்பு, ஜூன் 04

பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த பொடி மெனிகே ரயிலில் தீப் பரவியதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று காலை பதுளையில் இருந்து பயணிக்க ஆரம்பித்த ரயிலின் பின் இயந்திரத்தில் தீப் பரவியதாக தெரிவிக்கப்பட்டது.

ஹப்புத்தளை நிலையத்துக்கு அருகில் ரயிலில் தீ பரவியதாகவும், ரயில் ஹப்புத்தளை நிலையத்திற்கு வந்த பின்னர் தீ அணைக்கப்பட்டதாகவும் தெரியவந்தது.

தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இடமாற்றம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு; வட மாகாண அரச சாரதிகள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 04

வடக்கு மாகாண அரச சாரதிகள் தமக்கான இடமாற்றம் வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முதல் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக நேற்று காலை ஒன்றுகூடிய அரச சாரதிகள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வடக்கு மாகாணத்தில் கடந்த ஐந்து வருடங்களாக தடைப்பட்டிருந்த சாரதிகளின் இடமாற்றமானது கடந்த வருடம் பிரதி பிரதம செயலாளரினால் (நிர்வாகம்) விண்ணப்பம் கோரப்பட்டு இடமாற்றப் பட்டியலும் வெளியிடப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் ஆளுநரின் கோரிக்கைக்கு இணங்க இடமாற்றம் நிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் ஏமாற்றம் அடைந்த அரச சாரதிகள் கடந்த பெப்ரவரி மாதம் போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டிருந்தனர்.

போராட்டத்தினை தொடர்ந்து ஜூன் முதலாம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப் [illegible] அமுல்படுத்தப்படுமென



எழுத்து மூலமான உறுதிமொழியினை பிரதிப்பிரதம செயலாளர்(நிர்வாகம்) வழங்கியிருந்தார்.

குறித்த திகதியில் இடமாற்றம் நடைமுறைக்கு வராத நிலையில் வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தினர் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்நிலையில், இன்று முதல் தொடர்ச்சியாக 7ஆம் திகதி வரை தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கத்தினர் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# விபுலானந்தா மத்திய கல்லூரி வீதியில் உள்ள பாலத்தை திருத்தி அமைக்குக!

## அப்பகுதி மக்கள் கோரிக்கை

காரைதீவு, ஜூன் 04

காரைதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட விபுலானந்தா மத்திய கல்லூரிக்கு செல்லும் கார்பட் வீதியில் தோணா ஆற்றுக்கு மேலாகவுள்ள பாலம் பழுதடைந்து பல வருடமாகியும் இதுவரை திருத்தப்படாமல் இருப்பது எதிர்காலத்தில் பாரிய அனர்த்தமொன்றை ஏற்படுத்தலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.




இந்த வீதி கார்பட் வீதியாக புனருத்தானம் செய்யப்பட்ட போது இது விடயமாக பலர் எடுத்துரைத்தும் அதனையும் பொருட்படுத்தாமல் இவ் வீதி செப்பனிடப்பட்டது.

இவ்வீதியின் மேலாக கனரக வாகனங்கள் செல்லும்போது இப் பாலத்தில் அதிர்வை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

எனவே,சம்பந்தப்பட்ட வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிகள் இப்பாலத்தை திருத்தி இப்பாலத்தினூடாக பயமின்றி பயணிக்க உதவுமாறு மக்கள் கேட்டுள்ளனர். (அ)

# மின், இலத்திரனியல் கழிவுகள் கல்முனை பகுதியில் சேகரிப்பு




அம்பாறை, ஜூன் 04

உலக சூழல் தினத்தை முன்னிட்டு கல்முனை மாநகரசபைக் குட்பட்ட பிரதேசங்களில் மின்சார மற்றும் இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கும் வேலைத் திட்டம் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையும் மத்திய சுற்றாடல் அதிகார சபையும் இணைநது ஒழுங்கு செய்திருந்த இவ்வேலைத் திட்டம் கல்முனை மாநகர சபை முன்றலில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.எம்.இஸ்ஹாக்கின் நெறிப்படுத்தலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகர சபையின் பொறியியலாளர் ஏ.ஜே. ஏ.எச். ஜெளஸி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், உள்ளூராட்சி உத்தியோகத்தர் தாரிக் அலி சர்ஜூன், சுகாதாரப் பிரிவு பொறுப்பு உத்தியோகத்தர் எம். எம். பயாஸ், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.அஹத், மேற்பார்வையாளர்களான எம். அத்ஹம், யூ.கே. காலிதீன், கல்முனை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.எம்.எம். அர்ஷாத், எம்.எம். றினா உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

இரண்டு நாட்கள் முன்னெடுக்கப்படுகின்ற இவ் வேலைத் திட்டத்தின் மூலம் வீடுகளிலும் பொது இடங்களிலும் பாவனைக்கு உதவாமல் ஒதுக்கி அகற்றப்பட்டுள்ள மின்சார மற்றும் இலத்திர னியல் கழிவுகளை மாநகர சபையின் கழிவகற்றல் வாகனங்களில் சேகரித்து முறை யாக அகற்றுவதன் மூலம் சூழ லின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தர் எம். எம்.இஸ்ஹாக் தெரிவித்தார். (அ)



# தேசிய சுற்றாடல் வார நிகழ்வு கல்முனையில் முன்னெடுப்பு

அம்பாறை, ஜூன் 04

தேசிய சுற்றாடல் வாரத்தினை முன்னிட்டு நீர் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நீரினை பயன்படுத்தும் இடங்களில் "எமது வீடுகளில் பாவிப்பது போன்று நீரை சிக்கனமாகப் பாவிப்போம்" எனும் அறிவுறுத்தல் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டன.

அத்துடன் நீரினைப் பயன்படுத்தும் இடங்களில் உள்ள நீரிணைப்புக்களில் ஒழுக்குகள் கசிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு அவற்றினை சீர்செய்கின்ற பணிகளும் இதன்போது முன்னெடுக்கப்பட்டது.

கல்முனைப் பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எஸ்.எம்.பௌசாத் ஒருங்கிணைப்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற மேற்குறித்த நிகழ்வில் பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.எச்.றிஸ்பின் உள்ளிட்ட பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# காரைதீவு பிரதேச செயலகத்தில் கியூ.ஆர் பொறிமுறை அறிமுகம்




காரைதீவு, ஜூன் 04

பொதுமக்களின் முறைப்பாடுகளை துரிதமாக தீர்க்கும் திறனை அதிகரிப்பதற்காக காரைதீவு பிரதேச செயலாள ரினால் கியூ. ஆர் பொறிமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டு பொது இடங்களில் அவற்றை காட்சிப்படுத்துவதற்காக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட்டது.

இக்குறிமுறையை பொது மக்கள் தங்களது கையடக்க தொலைபேசி மூலம் ஸ்கான் செய்து தங்களது முறைப்பாடுகளை பிரதேச செயலாளருக்கு தமிழ் மொழி மூலம் நேரடியாக அனுப்பிவைக்கமுடியும் என காரைதீவு பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தெரிவித்தார்.

# சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தின சமுர்த்தி கொடி விற்பனை ஆரம்பம்



அம்பாறை, ஜூன் 04

சர்வதேச புகைத்தல் ஒழிப்பு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் சமுர்த்தி கொடி விற்பனை சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கமைவாக சாய்ந்தமருது - 07 ஆம் பிரிவில் சமுர்த்தி கொடி விற்பனை ஆரம்ப நிகழ்வு பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ். நூருல் றிபா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பிரிவு மட்ட சமுர்த்தி கொடி விற்பனையினை ஆரம்பித்து வைத்தார்.


இதில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# வடக்கு, கிழக்கு தேசிய இளைஞர் சேவை மன்ற உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வு

மட்டக்களப்பு, ஜூன் 04

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தமிழ் மொழியைக் கையாளும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்களின் தரம் மற்றும் கொள்ளவு திறனை மேம்படுத்துவதற்கான மூன்று நாட்கள் வதிவிட பயிற்சி செயலமர்வு மட்டக்களப்பு, சத்துரு கொண்டான் சர்வோதய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற காரியாலயங்களில் கடமை புரியும் உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்ப அலை தாக்கி 33 பேர் உயிரிழப்பு!

லக்னோ, ஜூன் 04

**இந்தியாவில் வெப்ப அலை தாக்கி ஒரே நாளில் 33 பேர் உயிரிழந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உத்தரப் பிரதேசத்தில் 13 தொகுதிகளுக்கு ஏழாம் கட்ட மற்றும் இறுதிக் கட்ட தேர்தல் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அப்போது தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த 33 பேர் அதிக வெப்பத்தை தாங்க முடியாமல் உயிரிழந்தனர்.**

இதில் ஊர் காவல் படையினர், துப்புரவுப் பணியாளர்களும் அடங்குவர் என்று அந்த மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி நவ்தீப் ரின்வா தெரிவித்தார்.

இந்தியா முழுவதும் வெப்ப அலை காரணமாக ஒரு மாதத்தில் 46 பேர் உயிரிழந்ததாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியாவில் இந்த ஆண்டு கோடை வெயிலின் தாக்கம் மிகவும் கடுமையாக இருக்கிறது. குறிப்பாக நாட்டின் வட மாநிலங்களில் வெப்பம் அதிகரித்துக் காணப்படுகிறது. கோடை வெயிலால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். டில்லி, பஞ்சாப், ஹரியானா, ஒடிசா போன்ற பல்வேறு பகுதிகளில் கோடை வெயில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

டில்லி உட்பட வடமாநிலங்களில் 45 டிகிரி செல்சியஸுக்கும் அதிகமாக வெப்பம் பதிவாகி வருகிறது. கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் தண்ணீர்த் தட்டுப்பாடும் மின்வெட்டு பாதிப்பும் பல இடங்களில் ஏற்பட்டுள்ளது. (எ)

காஸா யுத்தத்தின் எதிரொலி

# இஸ்ரேல் பிரஜைகளுக்கு தடை விதித்தது மாலைதீவு

மாலே, ஜூன் 04

இஸ்ரேல் பிரஜைகள் மாலைதீவுக்குள் நுழைவதைத் தடை செய்துள்ளதாக மாலைதீவு அரசாங்கம் அறிவித்துள்ளது.

காஸா மீது இஸ்ரேல் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் மாலைதீவில் மக்களின் சீற்றம் அதிகரித்துவரும் நிலையிலேயே அந்த நாட்டின் ஜனாதிபதி அலுவலகம் இவ்வாறு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிய கடவுச்சீட்டுகளைத் தடை செய்வதற்கு ஜனாதிபதி முகமட் முய்சு தீர்மானித்துள்ளார் என்று அவரது அலுவலகப் பேச்சாளர் தெரிவித்தார்.


இதனைத் தொடர்ந்து இஸ்ரேலிய பிரஜைகளை மாலைதீவுக்கு செல்ல வேண்டாம் என இஸ்ரேல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காஸா யுத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் இஸ்ரேலியர்களுக்குத் தடை விதிக்க வேண்டும் என எதிர்க் கட்சியினரும் அரசாங்கத்தின் கூட்டணியில் இடம்பெற்றுள் ளவர்களும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர். (எ)

# ட்ராக்டர் ட்ராலி கவிழ்ந்து விபத்து 13 பேர் மரணம்! 13 பேர் படுகாயம்

இந்தூர், ஜூன் 04

இந்தியாவின் மத்திய பிரதேசத்தின் ராஜ்கர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு ட்ராக்டர் ட்ராலி வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குழந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர். இவர்கள் அனைவரும் ராஜஸ்தானின் மோதிபுரா கிராமத்திலிருந்து மத்திய பிரதேசத்தின் ராஜ்கர் மாவட்டம் குலாம்பூருக்கு ஒரு திருமண நிகழ்ச்சிக்காக சென்றவர்களாவர்.



விபத்துக்குள்ளான ட்ராக்டர் - ட்ராலியில் 40 முதல் 50 பேர் பயணித்தனர். மத்தியப் பிரதேசத்தின் பிப்லோடி கிராமத்துக்கு அருகே வாகனம் வந்த போது சாரதியின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி விபத்துக்குள்ளானது.

மாவட்ட மருத்துவமனையில் காயமடைந்தவர்களில் 13 பேர் சேர்க்கப்பட்டனர். ட்ராலி என்பது ட்ராக்டரின் பின்புறத்தில் பயணிகள் அமர்ந்து செல்வதற்காக இணைத்துப் பயன்படுத்தப்படும் வாகனம் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# பொறுத்திருந்து பாருங்கள் முடிவுகள் முற்றிலும் மாறும்

## சோனியா காந்தி நம்பிக்கை



டில்லி, ஜூன் 04

"மக்களவை தேர்தல் முடிவுகள் கருத்துக் கணிப்புகளுக்கு முற்றிலும் நேர்மாறாக இருக்கும். பொறுத்திருந்து பாருங்கள்" என்று காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் 101 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு டில்லியிலுள்ள தி. மு. க. அலுவலகத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி கருணாநிதி படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அவருடன், முன்னாள் மத்திய அமைச்சர் டி. ஆர். பாலு, தி. மு. க. எம். பி திருச்சி சிவா, கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி. ராஜா ஆகியோரும் கருணாநிதி படத்துக்கு மரியாதை செலுத்தினர்.

பின்னர் மக்களவை தேர்தல் முடிவுகள் தொடர்பாக செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த சோனியா காந்தி, "நாங்கள் பொறுமை காக்கிறோம். பொறுத்திருந்து பாருங்கள். தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்புகளுக்கு முற்றிலும் நேர்மாறாக தேர்தல் முடிவுகள் இருக்கும் என நாங்கள் நம்புகிறோம். தேர்தல் முடிவுகள் இந்தியா கூட்டணிக்கு சாதகமாக அமையும்" என்று கூறினார்.

முன்னதாக, கருத்துக்கணிப்பு குறித்த கேள்விக்குப் பதிலளித்த காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, இது பிரதமர் நரேந்திர மோடியின் கற்பனைக் கருத்துக் கணிப்பு. 543 உறுப்பினர்களைக் கொண்ட மக்களவையில் 272 என்ற பெரும்பான்மையைத் தாண்டி 295 இடங்களுக்கு மேல் இந்தியா கூட்டணி வெற்றி பெறும்- என்றார். (எ)



# ஜேர்மனியில் கனமழை: 1,300 பேர் வெளியேற்றம்

பேர்லின், ஜூன் 04

ஜேர்மனியில் வெள்ளத்தால் அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளிலிருந்து சுமார் 1,300 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஜேர்மனியின் பவேரியா, பேடன் வுர்ட்டம்பேர்க் மாகாணங்களில் தொடர் கனமழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள டோனாவ், நெக்கர், குயென்ஸ் உள்ளிட்ட பல நகரங்கள் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. இதன் காரணமாக சில ஆறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது. இதனால் அங்குள்ள 10 மாவட்டங்களுக்கு அவசர நிலை விடுக்கப்பட்டுள்ளது.

# பா. ஜ. க. இன்னும் அதிக வீரியத்துடன் பாடுபடும்

## பிரதமர் மோடி உறுதி

டில்லி, ஜூன் 04

மாநிலத்தின் வளர்ச்சிக்குத் தெளிவான முடிவை மக்கள் வழங்கியுள்ளனர். மக்கள் நலன் மற்றும் மாநில வளர்ச்சிக்காக பா. ஜ. க. இன்னும் அதிக வீரியத்துடன் பாடுபடும்- என்று இந்தியப் பிரதமர் மோடி தனது எக்ஸ் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள 60 தொகுதிகளில் பா. ஜ. க. 46 இடங்களில் வெற்றி பெற்றுள்ள நிலையில் பிரதமர் மோடி, மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அருணாச்சலப் பிரதேசத்தில் பா. ஜ. க. 46 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி ஓர் இடத்தில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது. பிற கட்சிகள் 13 இடங்களில் வெற்றிபெற்றுள்ளன.

ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையைத் தாண்டி வெற்றி பெற்றதால் அருணாச்சலப் பிரதேசத்தில் பா. ஜ. க. மீண்டும் ஆட்சி அமைப்பது உறுதியாகிவிட்டது. (எ)

# குற்றவாளி தீர்ப்பு வந்தபின் ஆதரவை இழக்கும் ட்ரம்ப்

வாஷிங்டன், ஜூன் 04

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பின் பின்னர் குடியரசுக் கட்சிக்கு ஆதரவான வாக்காளர்களில் பத்து வீதமானவர்கள் அவருக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்பது ரொய்ட்டரின் கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்பைத் தொடர்ந்து ட்ரம்ப் குடியரசுக்கட்சியின் சிறிய அளவிலான ஆனால் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவர்களின் ஆதரவை இழக்கக் கூடும் என்பது கருத்துக் கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புக்கு இரண்டு நாள்களுக்குப் பின்னர் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் குடியரசுக்கட்சியின் ஆதரவாளர்களில் 10 வீதமானவர்கள் ட்ரம்புக்கு ஆதரவு வழங்குவதா? என்பது குறித்து சிந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கை நவம்பர் நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மிகவும் முக்கியமானதாக காணப்படலாம், ட்ரம்புக்கும் [illegible] மிகவும் அவசியமான மாநிலங்களில் சிறிய ஆதரவு இழப்பும் வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கக் கூடும்.

இதேவேளை, ட்ரம்பின் உறுதியான ஆதரவாளர்களில் பெரும்பான்மையானவர்கள் தங்களை இந்தத் தீர்ப்பு பாதிக்கவில்லை எனத் தெரிவித்ததுடன் அவருக்கான தங்கள் ஆதரவை வலுப்படுத்தியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சிறையில் அடைக்க வேண்டும் என ஆபாசப்பட நடிகை ஸ்டோர்மி டானியல் தெரிவித்துள்ளார்.

வணிக பதிவுகளை பொய்யாக்கிய வழக்கில் ட்ரம்ப் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே ஸ்டோர்மி டானியல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஆபாசபட நடிகையுடனான தனது தொடர்பினை இரகசியமாக வைத்திருப்பதற்காக ட்ரம்ப், ஸ்டோர்மி டானியலுக்கு பணம் வழங்கினார் என்ற குற்றச்சாட்டை அடிப்படையாக வைத்தே நீதிமன்றில் இந்த வழக்கு இடம்பெற்றது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்ற வளாகம் அருகே கைத்தொலைபேசி திருட்டு

## இருவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 04

**யாழ்ப்பாணத்தில் கையடக்கத் தொலைபேசியை திருடிச் சென்று விற்பனைசெய்த சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் இருவர் கைதுசெய்யப்பட்டார்.**

கடந்த வாரம் யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்துக்கு அருகில் தரித்து நின்ற முச்சக்கர வண்டியின் டாஸ்போட்டில் வைத்து பூட்டப்பட்ட 190,000 ரூபாய் பெறுமதியான கையடக்கத் தொலைபேசியை சைக்கிளில் வந்த மர்ம நபரொருவர் திருடிச் சென்றார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் கண்காணிப்பு கமெராவின் காணொளியை அடிப்படையாகக் கொண்டு சந்தேக நபர் சாவல்கட்டுப் பகுதியில் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

பொலிஸ் விசாரணையில் குறித்த சந்தேக நபர் 30,000 ரூபா பணத்துக்கு ஆறுகால் மடத்தைச் சேர்ந்தவருக்கு கையடக்கத் தொலைபேசியை விற்பனை செய்தமை தெரியவந்தது.

இதனையடுத்து கையடக்கத் தொலைபேசியை வாங்கியவரும் கைது செய்யப்பட்டு கையடக்கத் தொலைபேசி மீட்கப்பட்டது.

சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கையடக்கத் தொலைபேசியை திருடியதாக கருதப்படும் சந்தேகநபர் சைக்கிள் திருட்டுகளில் ஆறு மாத காலம் தண்டனை பெற்று விடுதலையானதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# அச்சுவேலி வீடொன்றின் மீது வன்முறை கும்பல் தாக்குதல்

## ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 04

அச்சுவேலி பகுதியில் அமைந்துள்ள வீடொன்றின் மீது, சுமார் 50 பேர் கொண்ட குண்டர் கும்பலொன்று தாக்குதல் நடத்தியதில் வீட்டின் உடைமைகள் சேதமடைந்துள்ளதோடு, ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் உள்ள பண்ணை ஒன்றினுள் காணப்பட்ட வீட்டின் மீதே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் தங்கியிருந்த இளைஞன் மீது நேற்று முன் தினம் மதியம் வன்முறைக் கும்பல் ஒன்று வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞன் சிகிச்சைக்காக யாழ்,போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் நேற்று முன் தினம் இரவு 20 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் வந்த சுமார் 50 பேர், குறித்த பண்ணை வீட்டினுள் புகுந்து அங்கு தாக்குதல் நடத்தி வீட்டின் உடைமைகளுக்கும் தீ வைத்து விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து அயலவர்கள் விரைந்து செயற்பட்டு தீயை அணைத்துள்ளதுடன் அச்சுவேலி பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர்.

தகவலின் பிரகாரம் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஆரம்ப கட்ட விசாரணைகளில் முன் பகையே தாக்குதலுக்கு காரணம் என தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சு.க. முன்னாள் தொகுதி அமைப்பாளர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைவு

கொழும்பு, ஜூன் 04

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் நாட்டைக் கட்டி யெழுப்பும் வேலைத் திட்டத்துக்கு ஆதரவளிக்கும் நோக்கில் சுதந்திரக் கட்சியின் முன்னாள் மதவாச்சி தொகுதி அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ கரலியத்த ஐக்கிய மக்கள் சக்தி யில் இணைந்துள்ளார்.

அனுராதபுரம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்கு பிரவேசித்த அவர் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரங்களுக்கான அமைச்சரவை அமைச்சராகவும் உள்ளூர் மருத்துவத்துறை அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் மதவாச்சி பிரதேசத்தின் இணை அமைப்பாளராக நியமிக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதுமக்களுக்கு உதவுவதற்கு பொலிஸார் தயார் நிலையில்

கொழும்பு, ஜூன் 04

நாட்டில் நிலவும் சீரற்ற கால நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பொலிஸ் திணைக்களம், விசேட அனர்த்த நிவாரணப் பிரிவை நிறுவியுள்ளது.

இதன்படி, 011 - 242 1820 மற்றும் 011 - 242 1111 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மக்கள் அனர்த்த நிவாரணத் தேவைகளுக்காக அழைக்க முடியும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# நளின் பண்டார எம்.பி பயணித்த ஜீப் விபத்து!



கொழும்பு, ஜூன் 04

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார பயணித்த ஜீப் மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளதாக நிட்டம்புவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி நேற்று அதிகாலை கொழும்பு - கண்டி பிரதான வீதியில் கொங்கஸ் தெனிய சந்திக்கு அருகில் நளின் பண்டார பயணித்த ஜீப் மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரின் ஜீப் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த போது வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பாராளுமன்ற உறுப்பினருக்கோ அல்லது பயணித்த எவருக்கோ காயம் ஏற்படவில்லை எனவும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் வட்டுபிட்டிவல ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார் எனவும் கூறப்பட்டது.

நிட்டம்புவ பொலிஸார் இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஊடகத்துறையின் பெருந்தூணாக விளங்கிய கலாசூரி சிவகுருநாதன்!

## பேர்த் நூல் வெளியீட்டில் பேராசிரியர் அமீர் அலி உரை





பேர்த், ஜூன் 04

இலங்கையில் இளம் படைப்பாளிகளின் படைப்புகளைத் தினகரனில் தொடர்ந்து வெளியிட்டு, தமிழ் இலக்கியத்திற்கு பெருந்தூணாக விளங்கியவர் கலாசூரி சிவகுருநாதன். அத்தோடு இலங்கை இளம் எழுத்தாளர்களை ஜாதி மத இன பேதமின்றி ஊக்குவித்து வந்தவர். இந்த நாட்டின் முக்கிய தேசிய பத்திரிகையின் ஆசிரியராக இருந்தும் எந்த விதமான பந்தாவுமின்றி மிக எளிமையாக உறவாடியவர் என பேர்த் நகரில் ஜூன் முதலாம் நாள் நடைபெற்ற 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூல் வெளியீட்டில் பேராசிரியர் அமீர் அலி உரையாற்றினார்.

அத்துடன் இலங்கை தமிழ் கலை இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது. அவர் தினகரன் பத்திரிகை ஆசிரியர் பதவியிருந்து ஓய்வு பெறும் வரை எந்த விதமான மாற்றமும் ஏற்படவில்லை என்றும் பேராசிரியர் அமீர் அலி உரையாற்றினார்.

இலங்கையில் ஆகக் கூடுதலான காலம் பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியர் பதவியை வகித்து சாதனை புரிந்த இவர், இன நல்லிணக்கத்திற்கு முன்மாதிரியாகச் செயற்பட்டார்.

மேற்கு அவுஸ்திரேலியா, பேர்த் மாநகரில் கலாசூரி இ. சிவகுருநாதனின் ஊடக பணியைக் கௌரவிக்கும் முகமாக 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் ஜூன் முதலாம் திகதி டாக்டர் அமீர் அலி தலைமையில் வெளியிடப்பட்டது.

இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூல் பேர்த் மாநாகரில் வெளியாகி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப் பணி இன்று வரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக தொடர்கின்றது என்பது அவரின் வாழ்வியல் சாதனையாகும். அவரின் இருபதாம் ஆண்டு நினைவு தினம் கடந்த வருடம் (08.08.2023) இலங்கையில் சிறப்புற நினைவு கூரப்பட்டது.

தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற முன்னாள் தினகரன் ஆசிரியர் கலாசூரி இ. சிவகுருநாதன் இலங்கை இலக்கியப் பரப்பிலும், ஊடகத் துறையிலும் தனக்கெனப் பல முத்திரைகளைப் பதித்துக் கொண்டவர். அவரை நினைவு கூறும் 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' நூலினை ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்துள்ளார். மூத்த தமிழ் எழுத்தாளர், இலக்கிய ஆர்வலருமான டாக்டர் அமீர் அலி தலைமையில் இந்நூல் வெளியீடு நடைபெற்றது.

இளம் தலைமுறையினரும் எழுத்தாளுமைகளை அறியும் வண்ணம், இந்நிகழ்வின் ஆரம்ப வரவேற்புரையை இளம் மாண்வன் கௌசிக்ராஜ் கதிர்காமன் குமார் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திரு நிலக்ஷன் ஸ்வர்ணராஜா நூலை அறிமுகம் செய்து சிறப்புரை ஆற்றினார். அதன்பின் எழுத்தாளரும், இலக்கிய ஆர்வலருமான திருமதி ஜனனி சிவமைந்தன் இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனை படைத்த இரத்தினதுரை சிவகுருநாதன் நூல் பற்றிய சிறப்புரை நிகழ்த்தினார்.

தினகரனில் சிவகுருநாதன் ஆற்றிய பணி பற்றி எடுத்தியம்பும் இந்நூலின் சிறப்புரையை எழுத்தாளரும், நூலக ஆவண காப்பாளருமான திரு.கோபிநாத் தில்லைநாதன் ஆற்றினீர். தினகரனில் தொடங்கிய கலாசூரி சிவகுருநாதனின் ஊடகப்பணி மற்றும் இலக்கியப்பணி இன்று வரை அவரை எவராலும் மறக்க முடியாத ஆளுமை உள்ளவராக நிலை நிறுத்தியது அவரின் வாழ்வியல் சாதனையாகும்.

அவரின் இருபதாம் ஆண்டு நினைவாக "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" எனும் நூலின் தொகுப்பாசிரியர் திரு. ஐங்கரன் விக்கினேஸ்வரா நூலின் ஏற்புரையை வழங்கினார். அத்துடன் கன்பராவில் இருந்து இலக்கிய ஆர்வலர் திரு.மயூரன் சின்னத்துரை, இலங்கையில் இருந்து மூத்த கல்விப் பணிப்பாளர் தணிகாசகம்பிள்ளையும் காணொலி மூலம் உரையாற்றினர்.

இதன் பின் பேர்த் மாநகரில் இந்த நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, தொகுத்து வழங்கிய புகழ் பெற்ற பாடகரும், இலக்கிய ஆர்வலருமான ராஜன் வடிவேலின் நன்றியுரையுடன் இறுதியாக விழா சிறப்புற நிறைவு பெற்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்...

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் விவகாரத்தை கொள்கை ரீதியாக நாம் ஏற்றுக்கொண் டுள்ளோம். எனினும், நாம் ஓர் அரசியல் கட்சி என்ற ரீதியில் நிதானமாக - விடயங்களை அலசி ஆராய்ந்தே முடிவு எடுக்க முடியும்.

நாம் இதனை தனித்து - தனி ஒரு கட்சியாகக் கையாள முடியாது. தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள கட்சிகள் - பெரும்பாலான கட்சிகள் ஒற்றுமையாக - ஒன்றுபட்டு நின்றாலே இது சாத்தியமாகும். தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் எமது கட்சியின் நிலைப்பாட்டை விரைவில் அறிவிப்போம் - என்றார். (ஐ)

## வடமாகாண...

தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் நேற்று திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

இன்றைய தினமும் விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், வடக்கு மாகாணத்தில் சீரான கால நிலையே காணப்படுவதால் வடக்கில் பாடசாலைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலைகள் வழமைபோன்று இயங்கும்.

இதேநேரம், உயர்தர வகுப்புகளுக்கான வகுப்புகள் இன்றைய தினம் ஆரம்பமாகும் என்றும் மாகாண கல்வி பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## பொது வேட்பாளரை...

சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியானது கொள்கை ரீதியாகப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்ற நிலையை ஏற்கனவே எடுத்திருந்தாலும் இந்தக் கூட்டணியில் இருக்கக்கூடிய ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ போன்ற கட்சிக ள்இந்த விடயத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்கின்ற செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

ஈ. பி. ஆர். எல். எவ். தனது அரசியல் பீடக் கூட்டத்தை கூட்டி பொதுவேட்பாளர் என்ற விடயத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் எங்களுடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கக் கூடிய தமிழ் சிவில் அமைப்புகள், கட்சிகள் அனைத்தையும் இணைத்து இந்த விடயத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் எனவும் முடிவு செய்துள்ளோம்.

இதைப் போலவே ஏனைய கட்சிகளும் தங்கள் கட்சிகளின் உயர் பீடங்களைக் கூட்டி தமது முடிவுகளை இன்னும் சில தினங்களில் வெளியிடவுள்ளனர். தமிழர் தரப்பிலிருந்து பொது வேட்பாளரை நியமிப்பது என்ற விடயம் பல்வேறு தரப்பினரதும் ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படுகின்றது. இதனடிப்படையில் சமூக மட்டத்தில் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட அமைப்புகள், சங்கங்கள் இப்போது தமது ஆதரவை வழங்கி வருகின்றன.

அந்தவகையில் பொது வேட்பாளர் என்ற விடயத்தை பற்றி இப்போது அரசியல் கட்சிகள் பலவும் ஆலோசித்து வருகின்றன. இதனை, அடுத்த கட்டத்துக்கு முன்னெடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்நிலையில் இங்கே ஒரு கோரிக்கையை நான் முக்கியமாக முன்வைக்க வேண்டும். தமிழ் அரசு கட்சியானது சமஷ்டி அரசியல் அமைப்பை தமது நோக்கமாக கொண்டு தந்தை செல்வாவால் உருவாக்கப்பட்ட ஒரு முக்கியமான அரசியல் கட்சி மாத்திரமல்ல, பாராளுமன்றத்தில் தமிழர் தரப்பில் கூடுதலான ஆசனங்களையும் வைத்திருக்கக்கூடியஒரு கட்சியாக இருக்கின்றது.

ஆகவே, எதிர்வரும் இந்த ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு கையாண்டால் தமிழ் மக்களுக்கான உரிமைகளை பெற்றுக்கொள்ளலாம், தமிழ் மக்களின் எதிர்காலத்தை சரியான பாதையில் கொண்டு செல்லலாம் என்று சிந்தித்து விரைவாக முடிவை எடுக்க வேண்டிய ஒரு பணி அவர்களுக்கு இருக்கின்றது.

ஆனால், அவற்றை அவர்கள் ஒத்தி வைத்து நாங்கள் காலம் வரும்போது முடிவெடுப்போம் என்று சொல்வது நிச்சயமாக தமிழர்களுடைய எதிர்காலத்துக்கு உகந்த கருத்துகள் அல்ல. ஆகவே, தமிழ் மக்களுடைய நலன்கள் - தமிழ் மக்களுடைய உரிமைகள் - தமிழ் மக்களுடைய எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும் தமிழ் அரசுக் கட்சி சரியான முடிவை மிகமிக விரைவாக எடுத்து எல்லோருடனும் இணைந்து பயணிப்பதானது தமிழ் மக்களுக்கு நிச்சயமாக தேவையான ஒரு விடயமாகவே நாங்கள் கருதுகின்றோம்.

மேலும், தமிழ் அரசுக் கட்சியில் இருக்கக்கூடிய ஒரு சிலர் - குறிப்பாக சீ. வீ. கே. சிவஞானம் போன்றோர் பொது வேட்பாளரை நாங்கள் தேடுகின்ற போதே இந்த விடயம் முடங்கிப் போய் விடும் என்றும் இந்த வேலைகள் முடக்கப்பட்டுவிடும் எனவும் - இது அடுத்த கட்டத்தை நோக்கி நகராது என்ற பாணியிலும் கருத்துக்களை முன்வைத்திருந்தனர்.

உண்மையாகவே இந்த முயற்சி தோற்றுப் போக வேண்டும் என்று பல பேர் விரும்புகின்றார்கள். அதில் சீ.வீ. கே. சிவஞானமும் ஒருவராக சில சமயம் இருக்கலாம். இது மேலும் நகரக் கூடாது, முடக்கப்பட வேண்டும் என்றும் சிந்திக்கிறார்கள். இவ்வாறு இதனை முடக்கினால் சந்தோசப்படுவதற்கும் சில பேர் இருக்கின்றனர் என்றே எங்களுக்குத் தோன்றுகின்றது.

இதிலும் முக்கியமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்குமாறு பிரசாரம் செய்கின்றது.

சிலர் புறக்கணிப்பும் பொது வேட்பாளரும் ஒன்று என்றும் கருத்துகளை கூறிவருகின்றனர். உண்மையில், தேர்தல் புறக்கணிப்பும் பொது வேட்பாளர் விடயமும் ஒன்றல்ல.


இந்தத் தேர்தலுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை. இந்தத் தேர்தலுக்கு நாங்கள் வாக்களிக்கவேண்டும் என்று அவசியமில்லை என்ற கருத்தைத்தான் அவர்கள் முன்வைக்க முயற்சிக்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் என்பது இலங்கையில் நடக்கக்கூடிய தேர்தல். இலங்கை என்ற நாட்டுக்குள் தமிழர், முஸ்லிம், சிங்களவர் என்ற அனைவரும் வாழ்கின்றார்கள். இவ்வாறான சூழ்நிலையில் இந்தத் தேர்தலுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று சொல்வது முதலாவதாக அர்த்தமற்ற விடயம்.

இரண்டாவதாக இந்தத் தேர்தலை நாங்கள் ஏன் பாவிக்க விரும்புகின்றோம். என்றால் முக்கியமாக இலங்கையில் இருப்பது வெறுமனே ஒரு பொருளாதார பிரச்னை மாத்திரம்தான், அது தீர்ந்து விட்டால் அனைத்து பிரச்னைகளும் தீர்ந்து விடும் என்று அரசு நாட்டுக்கும் வெளி உலகத்துக்கும் சொல்லிக் கொண்டிருக்கின்றது. புரையோடி போயுள்ள தேசிய இனப்பிரச்னை தீர்க்கப்படாமல் பொருளாதாரப் பிரச்னை தீர்க்கப்படமாட்டாது என்பதை உலகறிய செய்யவும், சிங்கள மக்களுக்குப் புரிய வைக்கவும் வேண்டும். தேர்தல் புறக்கணிப்பால் எதனையுமே சாதிக்கப்போவது கிடையாது.

பொது வேட்பாளர் என்ற விடயத்தை நாங்கள் முன்னெடுக்கக்கூடிய நிலையில் ஆதரவு கோரி இன்னும் சில தினங்களில் ஜே. வி. பியினர் யாழ்ப்பாணம் வருகின்றார்கள். இதேபோல் மற்றவர்களும் இங்கு வரவிருக்கின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள இந்தக் காலத்தை சரியான முறையில் கையாள வேண்டும் - என்றார். (ஐ)

# மருத்துவர் என்று கூறி மோசடி செய்தவர் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 04

போலி ஆவணங்களை காண்பித்து தன்னை மருத்துவர் என்று அறிமுகப்படுத்தி கனடாவில் உள்ள ஒருவரிடம் ஒரு கோடியே 42 இலட்சம் ரூபாயை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் சுன்னாகத்தை சேர்ந்த 29 வயது நபராவார். அவரிடம் இருந்து அதிசொகுசு கார், 15 பவுணி நகைகள், 5 இலட்சம் ரூபாய் பணம், 5 கைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இளைஞர், தன்னை ஒரு மருத்துவராக அடையாளப்படுத்தி போலி ஆவணங்களை தயாரித்துள்ளார். இதைத் தொடர்ந்து, கனடாவிலுள்ள ஒருவரை தொடர்பு கொண்ட அவர் மருத்துவ மேற்படிப்புக்காக புலமைப் பரிசில் கிடைத்துள்ளது. அதற்கு பணம் தேவை. இதற்காக யாழ். நகரிலுள்ள காணி ஒன்றை விற்கப் போவதாகக் கூறியுள்ளார்.

இதைத் தொடர்ந்து போலி ஆவணங்கள் மூலம் அந்தக் காணியை ஒரு கோடியே 42 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளார். வங்கி மூலம் பணம் பரிமாறப்பட்டது.

இதன் பின்னரே விடயமறிந்த கனடாவாசி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேநேரம், தன்னை மருத்துவர் என்று அடையாளப்படுத்திய கைதான நபர் ஏழை மக்களுக்கு இலவச மருத்துவ சேவை வழங்குவதாகக் கூறியும் வெளிநாடுகளிலுள்ள பலரிடம் பணம் பெற்றமை தெரியவந்துள்ளது. (ஐ)

## தீர்க்கமான...

இந்த நிலையிலேயே கட்சியின் இறுதி நிலைப்பாட்டை எடுப்பதற்காக புளொட்டின் மத்திய குழு இன்று செவ்வாய்க்கிழமை கூடுகின்றது. மெய்நிகர் வழியாக இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அனர்த்தத்தால்...

இடமளிக்க வேண்டாம் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சீரற்ற காலநிலையால் தென்னிலங்கையில் 84 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினர் தங்கியுள்ள அம்பத்தளை, கல்வான புராண ரஜமஹா விகாரை, சேதவத்த வெஹெரகொட புராண ரஜ மஹா விகாரை, கொலன்னாவ டெரன்ஸ் எஸ். சில்வா வித்தியா லயம் மற்றும் வெல்லம்பிட்டி காமினி வித்தி யாலய பாதுகாப்பு நிலையங்களுக்கே நேற்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைக்கப்பட்ட உணவு மற்றும் நிவாரண உதவிகளை உடன் வழங்குமாறு ஜனாதிபதி இதன்போது உத்தரவிட் டார்.

அத்துடன், வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை, அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து நிரந்தர வேலைத் திட்டமொன்றை தயாரிக்குமாறும் குழாய்களை பயன்படுத்தி வெள்ளம் வேகமாக வடிந்து செல்ல வழிசெய்து, மக்கள் தமது இருப்பிடங்களுக்கு விரைந்து செல்ல வழியேற்படுத்துமாறும் ஜனாதிபதி இதன்போது கூறினார்.

ஜனாதிபதியின் இந்தப் பயணத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், பாராளுமன்ற உறுப்பினர்களான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, சட்டத்தரணி பிரேமநாத். சி. தொலாவத்த, எஸ். எம். மரிக்கார், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் உள்ளிட்டோரும் இணைந்து கொண்டனர். (ஐ)

## உயிரிழப்பு...

முழுமையாகவும் 1,214 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

அத்துடன், சீரற்ற காலநிலையால் 51 நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், பாதிக்கப்பட்ட மக்கள் 77 பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உதவிகளை அரச திணைக்களங்கள் மற்றும் பொது மக்கள் வழங்கி வருகின்றனர். (ஐ)

## ஜனநாயக...

இல்லாததால் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து, வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் விடுத்த செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அத்துடன், போராட்டங்களை நடத்துபவர்களை கைது செய்த பின்னரே பொலிஸார் காரணங்களை தேடுகின்றனர் என்றும் மாணவர்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ)

## ஐ.எம்.எவ்...

கடன் வசதியின் இரண்டாவது மதிப்பாய்வு எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவிருக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிகழ்ச்சி நிரலில் இணைக்கப்பட்டுள்ளது.

இதன்போது, இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்யப்படும். பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குவதற்கான மூன்றாவது தவணையை வழங்குவது குறித்தும் பரிசீலிக்கப்படவுள்ளது. இதற்கு கடன் வழங்கிய சகல நாடுகளின் ஒத்துழைப்பையும் பெற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# வெள்ளத்தால் சேதமுற்ற வீடுகளை அரச செலவில் நிர்மாணிக்க முடிவு!

## ஜனாதிபதி ரணில் நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 04

சீரற்ற காலநிலையால் சேதமடைந்த வீடுகளை அரசாங்கத்தின் செலவில் நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவரச அமைச்சரவை பத்திரம் ஒன்று நேற்று சமர்பிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமருக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சீரற்ற காலநிலையால் சேதமடைந்த வீடுகளை முப்படையினரின் உதவியுடன் அரசாங்கத்தின் செலவில் நிர்மாணிப்பதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு தேவையான பணிகளை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாணய நிதிய செயல்குழுவுடன் ஜூன் 12இல் முக்கிய சந்திப்பு!

கொழும்பு, ஜூன் 04

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் சந்திப்பு நிகழ்ச்சி நிரலின் கீழ் இலங்கைக்கான நான்காவது ஆலோசனையும் இரண்டாவது மீளாய்வும் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பில் இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் சீர்திருத்த முன்னேற்றம் குறித்து மதிப்பீடு செய்யப்படும் என அமைச்சர் தனது எக்ஸ் கணக்கில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ஸ்திரத்தன்மை, வளர்ச்சி மற்றும் சீர்திருத்த முயற்சிகளை மேலும் மேம்படுத்தும் மூன் றாவது தவணையை வெளியிடுவதற்கான வெற்றிகரமான மீளாய்வுக்கு அனைத்து நாடுகளின் தொடர்ச்சியான ஆதரவை இலங்கை எதிர்பார்க்கிறது என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (அ)


# மயிலத்தமடு - மாதவனை விவகாரத்தில் கைதான ஆறு மாணவர்களும் விடுதலை

ஏறாவூர், ஜூன் 04

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல்த்தரை சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிராக கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் போராட்டமொன்றை மேற்கொண்டிருந்த யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஏறாவூர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

பொலிஸார் போதிய சாட்சியங்களை முன்வைக்கத் தவறியமை, குற்றப் பத்திரிகையில் காணப்பட்ட முரண்பாடு, மேலும் குற்றச்சாட்டுக்களை முன்கொண்டு செல்வதற்கான எவ்வித முகாந்தரங்களும் இல்லை என்னும் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்ட மாணவர்கள் 6 பேரும் ஏறாவூர் நீதிமன்றத்தால் நேற்றைய தினம் விடுதலை செய்யப்பட்டனர். (எ)

# கொழும்பிலிருந்து சென்ற ரயில் நேற்று தடம்புரள்வு



கொழும்பு,ஜூன் 04

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த ரயில் தடம் புரண்டுள்ளதாக நாவலப்பிட்டி புகையிரத கட்டுப்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஹற்றன் மற்றும் கொட்டக்கலை ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்றுத் திங்கட்கிழமை மாலை ரயில் தடம் புரண்டுள்ளது.

இதனால் மலையக ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது .

இதேவேளை, ரயில் பாதையை சரி செய்யும் வரை தலவாக்கலை ரயில் நிலையத்தில் ரயில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நாவலப்பிட்டி புகையிரத கட்டுப்பாட்டு அறை மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# அரசாங்க வர்த்தமானிக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்க முடியாது

## நீதிமன்றம் நேற்று தீர்ப்பு

கொழும்பு, ஜூன் 04

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,700 ரூபாயாக அதிகரித்து, தொழில் அமைச்சு வெளியிட்ட வர்த்தமானிக்கு எதிராக இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பிக்க முடியாதென மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளமாக 1,700 ரூபாயை நிர்ணயித்து தொழில் ஆணையாளரால் வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், இந்த சம்பள அதிகரிப்பு நடைமுறைச் சாத்தியமற்றது எனத் தெரிவித்து பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனம் நீதிமன்றத்தை நாடியிருந்த நிலையில் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (எ)

# உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய 27,000 பேர் மூன்று பாடங்களிலும் சித்தியடையவில்லை

கொழும்பு, ஜூன் 04

இலங்கைத்தீவில் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் 27,970 பேர் சகல பாடங்களிலும் சித்தியடையவில்லை என பரீட்சைத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதன்படி, பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் 10.04 வீதமானவர்கள் இவ்வாறு சகல பாடங்களிலும் சித்தியடையவில்லை.

மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்தியை 10,484 பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்டுள்ள நிலையில் இது 3.9 வீதம்.

விண்ணப்பித்தவர்களில் 173,444 பேர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ள நிலையில் இது 64.33 வீதம் ஆகும்.

இவ்வருடம் பரீட்சைக்கு தோற்றிய 190 விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவர்களில் 146 தனியார் விண்ணப்பதாரர்களும் 44 பாடசாலை விண்ணப்பதாரர்களும் உள்ளனர்.

2023 உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் வீதம் ஆண் பரீட்சார்த்திகளின் வீழ்ச்சியையும் பெண் பரீட்சார்த்திகளின் அதிகரிப்பையும் காட்டுகிறது.

பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரிகளின் பெறுபேறுகளை ஆராயும் போது இது தெளிவாக உள்ளது. இது கல்வித்துறையில் உள்ள அனைவரும் அவதானம் செலுத்த வேண்டிய நிலை.

கொவிட் தொற்று மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு சிக்கல் நிலைமைகள் காரணமாக உரிய முறையில் பாடசாலைக் கல்வியைத் தொடர முடியாமல் தவித்த மாணவர் குழுவொன்று இந்த வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியது.

மேலும், பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் 27,000 பேர் மூன்று பாடங்களிலும் சித்தியடையாமை இலங்கைக் கல்வி முறைமையில் பாரிய பின்னடைவை காட்டுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (அ)

சிவமயம்
யாழ்ப்பாணம் - அரியாலை நீர்நொச்சித்தாழ்வு
அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானம்
மஹா கும்பாபிஷேக பெருவிழா - 2024
தென்னிந்திய கர்நாடக இசைப்பேரரசி கலைமாமணி
டாக்டர் நித்யஸ்ரீ மகாதேவன் அவர்களின்

"தெய்வீக இன்னிசைக்கச்சேரி"
இடம் : ஆலய முன்றல்
10 ஆனி 2024 திங்கட்கிழமை
இரவு 7.00 மணி முதல்
அணிசேர் கலைஞர்கள்:
வயலின் - போரூர் M.A.கிருஷ்ணசாமி
மிருதங்கம் - நெய்வேலி சு.ஸ்கந்த சுப்ரமணியன்
முகர்சிங் - நா.சுந்தர்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
பூரண அனுசரணை :
அரியாலையூர் நோர்வே வாழ் விநாயகர் அடியார்
திரு. N.நேதாஜி அவர்கள்

# சிமெந்து விலை குறைந்தது

கொழும்பு, ஜூன் 04

50 கிலோ கிராம் நிறையுடைய சிமெந்து பொதியின் விலையை 150 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக சிமெந்து நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இந்த விலை குறைப்பானது ஜூன் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 50 கிலோ கிராம் நிறையுடைய சிமெந்து பொதியின் புதிய விலை 2,250 ரூபாவாகும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.